கோகுலம்

குழந்தைகள் பத்திரிகை
மாதம் இருமுறை
24-6-1973
30 காசு




கோகுலம்

மலர் 2 :: இதழ் 6


ஜூன் 24, 1973

பிரமாதீச, ஆனி 10



உயிர்களிடத்து அன்பு
வேண்டும் — தெய்வம்
உண்மையென்று தானறிதல்
வேண்டும்

— பாரதியார்



சந்தா விவரம் :

ஒரு வடம் ரூ. 7–00

ஆறு மாதம் ரூ. 3–50

நிர்வாகி, கோகுலம்

கல்கிப் பூங்கா, சென்னை-600031



அட்டைப் புலி :
அப்பப்பா! ஒரே பசி. போன
இதழில் இங்கே ஒரு மான் குட்டி
இருந்ததே, பார்த்தீங்களா?

வண்ணப்படம் : வித்யாவ்ரதா

கண்ணன் கனியமுதம்

திருமுருக கிருபானந்தவாரியார்

அக்குரூரரை அத்தினபுரத்துக்கு அனுப்பியது

ஒரு நாள் எம்பெருமான் பலராமருடனும் உத்தவருடனும் பரம பக்த சிகாமணியாகிய அக்குரூரருடைய திருமாளிகைக்கு எழுந்தருளினர். அக்குரூரர் எதிர்கொண்டு அழைத்து அஞ்சலி செய்தார்.

கண்ணபிரான், ''அக்குரூரரே! நீர் பரம பவித்திரர். உமது கருணையால் மக்கள் இன்புற்று வாழ்கின்றனர்கள்.

''என் அத்தையும் வீர பத்தினியுமாகிய குந்திதேவி, தன் கணவனை இழந்து தன் மக்களாகிய பாண்டவர்களுடன் அத்தினபுரியில் வாழ்கின்றாள். தீயவர்களாகிய துரியோதனனியரும் திருதராஷ்டிரனும் தூயவர்களாகிய பாண்டவர்களைப் பகைத்துத் துயரம் புரிவதாக அறிகின்றேன்.

''நீர் இத்தினமே அத்தினபுரம் போய்ப் பாண்டவர்களின் நலத்தை அறிந்து வாரும். பாண்டவர்களை ஆண்டருள்வது நமது கடமை'' என்று கூறி அருளினர்.

அக்குரூரர் கண்ணனுடைய கட்டளையைச் சென்னி மேற்கொண்டு தேரேறி அத்தினபுரத்தை அடைந்தார். திருதராஷ்டிரன், பீஷ்மர், துரோணர், கிருபர், விதுரர், பாகுவீரன், சோமகன் அசுவத்தாமா, துரியோதனன், கர்ணன், சகுனி முதலியோரைப் பார்த்து, அவர்கள் உபசரிக்க நலம் வினவி அங்கே சில நாட்கள் தங்கியிருந்தார்.

ஒரு நாள் அக்குரூரர் விதுரருடன் தனிமையில் இருந்து கிருஷ்ணருடைய பெருமைகளைப் பேசி மகிழ்ந்துகொண்டிருந்தார். அங்கே குந்தி தேவி வந்து, அந்நல்லவரைப் பார்த்துக் கூறுகின்றாள்.

''என் அருமைத் தந்தையே! உமக்கு வணக்கம். மதுரையில் என் தாய் தந்தையர்களும், என் தம்பி வசுதேவனும் நலமா? கருணாமூர்த்திகளாகிய பலராமனும் கண்ணனும் சுகமா? அவர்கள் என்னை எப்போதாவது நினைக்கின்றார்களா? துரியோதனன் முதலியோர் நாவில் தேனும் நெஞ்சில் நஞ்சும் வைத்து எங்களுடன் உறவு செய்கின்றார்கள். என் மக்களுக்குத் தீங்கு விளைவிக்கின்றார்கள். தெய்வத் திருவருளால் என் பிள்ளைகள் உய்வு பெற்று வாழ்கின்றார்கள்'' என்று கூறிக் கண்ணீர் சிந்தினள்.

அக்குரூரர், ''அம்மையே! நீ அழாதே! தாழ்ந்தவர்கள் உயர்வார்கள்; உயர்ந்தவர்கள் தாழ்வார்கள். கண்ணபிரான் சதா உங்கள் நலத்தில் கவனம் உள்ளவராக இருக்கின்றார். நீ வருந்தாதே!'' என்று இன்னுரை இயம்பித் தேற்றினர்.

பின்னர் அக்குரூரர் திருதராஷ்டிரனுக்கு அறவுரைகள் பகர்ந்து மதுரை மாநகரம் வந்து சேர்ந்தார்.

துவாரகைக்கு எழுந்தருளியது

ஜராசந்தனுடைய புதல்விகள் அஸ்தி, பிராப்தை என்பவர்களைக் கம்சன் மணந்திருந்தான். கம்சன் மாண்டதனால் அஸ்தியும் பிராப்தையும் மிகவும் அழுது ஜராசந்தனிடம் போய்ப் புலம்பி அழுதார்கள். மருமகனைக் கொன்றதனால் ஜராசந்தன் சீற்றம் அடைந்தான். இருபத்து மூன்று அக்குரோணி சேனைகளுடன் வந்து மதுரையை வளைத்துப் போர் புரிந்தான்.

பலராமரும் கண்ணபிரானும் கடும் போர் புரிந்தார்கள். இவ்வாறு ஜராசந்தனுடன் பதினெட்டு முறை போர் நிகழ்ந்தது.

கண்ணபிரான் மேல் கடலில் விசுவகர்மாவைக் கொண்டு துவாரகாபுரியை உண்டாக்குமாறு செய்து யாதவர்களுடன் அங்கு குடியேறினர். அங்கு எல்லா நலன்களும் அமைந்திருந்தன. தாமரை ஓடைகள், பளிங்கு மேடைகள், செய்குன்றங்கள், நந்தவனங்கள், பழத் தோட்டங்கள் யாவும் விளங்கி அழகு செய்தன.

காலயவனைக் கொல்வித்து முசுகுந்தனுக்கு அருள்புரிந்தது

ஒரு சமயம் யாதவ புரோகிதராகிய கர்காசாரியரை யாதவர்கள் நபும்சகர் என்று கூறிப் பரிகசித்தார்கள். கர்காசாரியர் சினந்து, ''உங்களை வதைக்கும் ஒரு புதல்வனைப் பெறுவேன்'' என்று கூறி, சிவமூர்த்தியை வேண்டித் தவம் செய்து, சிவனருள் பெற்றார். வெகு காலம் மகப்பேறு இன்றி வருந்திய யவன மன்னன் வேண்டுகோளுக்கிணங்கி அவனுடைய மனைவியிடம் காலயவன் என்ற புத்திரனை உண்டாக்கினர்.



காலயவன் ஜராசந்தனுக்குத் தோழனாகிக் கண்ணபிரானைக் கொல்லப் பெருஞ் சினத்துடன் வந்தான். கண்ணபிரான் அவனை எதிர்த்து வதைக்க முடியாது என அறிந்து புறங்கொடுத்து ஓடுபவரைப்போல் ஓடி ஒரு குகையில் ஒளிந்து கொண்டார். காலயவன் குகைக்குள் நுழைந்தான். அங்கு மலைபோல் உறங்குகின்ற முசுகுந்த சக்கரவர்த்தியைக் கண்டு அவனைக் கண்ணன் என்று கருதிக் காலால் உதைத்தான். முசுகுந்த சக்கரவர்த்தி எழுந்திருந்து கண்களை உருட்டிப் பார்த்தார். காலயவன், சாம்பராகிப் போனான்.

முசுகுந்தன் வரலாறு

மாந்தாதாவின் மகன் முசுகுந்தன். தேவர்களுக்கு அசுரர்கள் இடர் புரிந்த போது தேவர்கள் முசுகுந்தனிடம் சரண் புகுந்தார்கள். கருணைமிகுந்த முசுகுந்தன், தேவர்கள் சேனாதிபதியாகி அசுரர்களுடன் பல காலம் போர் புரிந்து அசுரர்களை வதைத்து அமரர்களுக்கு அருள் புரிந்தார். இந்திரன் முசுகுந்தரை வணங்கி, ''உமக்கு என்ன வரம் வேண்டும்? கேளும்'' என்றான்.

முசுகுந்தச் சக்கரவர்த்தி, ''நான் மிகவும் அயர்ச்சியாக இருக்கின்றேன். சில காலம் அமைதியாக உறங்க வேண்டும்'' என்றார்.


இந்திராதி இமையவர் ''அவ்வாறே நீர் அமைதியாக உறங்குவீராக. இடையில் தூக்கத்தை விட்டு எழுப்புகின்றவன் எரிந்து கரிந்து சாம்பராவான்'' என்று வரமளித்தார்கள்.

அதனால் இவரைத் துயில் உணர்த்திய காலயவன் எரிந்து போனான். பின்னர் கோகுலகிருஷ்ணர் அவனுக்குக் கோடி சந்திர ஒளியுடன் காட்சி அளித்தார். முசுகுந்த சக்கரவர்த்தி எம்பிரானை வணங்கி எல்லையில்லாத இன்புற்றார். இடையறாத பக்தியை அவரிடம் வரமாகப் பெற்றார்.

பின்னர் முசுகுந்த வேந்தர் அம்மலைக் குகையினின்று நீங்கி, பத்ரிகாச்சிரமம் சென்று தவஞ் செய்து பரகதி அடைந்தார்.

பகவான் மதுரை சென்று காலயவனுடைய சேனைகளான மூன்று கோடி துடுக்கரையும் மாய்த்துத் துவாரகாபுரி சென்று பரம சுகமாக வாழ்ந்துகொண்டிருந்தார். (தொடரும்)





கூட்டுப் பிரார்த்தனை

மாறன்

அரிஸோனா நாட்டில் வெகுகாலமாக மழையே பெய்யவில்லை. ஆறு குளங்கள் எல்லாம் வறண்டு போயின. கிணறுகளில் உள்ள நீரும் படிப்படியாகக் குறைந்து வற்றிப் போய்விட்டது. இயந்திரங்களைக் கொண்டு வந்து அதிக ஆழமுடைய புதிய குழாய்க் கிணறுகளை அமைக்க முயன்றார்கள். நெடுங் காலமாக மழை நீர் பூமிக்கடியில் இறங்காத காரணத்தால் குழாய்க் கிணறுகளிலும் ஊற்று நீர் பெருகி வரவில்லை.

விஞ்ஞான ரீதியில் மழை பெய்விக்கலாம் என்று கைதேர்ந்த விஞ்ஞானிகளை வரவழைத்தனர் அரிஸோனா நாட்டு அறிஞர்கள். அந்த விஞ்ஞானிகள் அங்குள்ள வானிலையை ஆராய்ந்து பார்த்தனர். அந்த நாட்டுக்கு நேராக ஆகாயத்தில் மேகப்படலங்கள் எதுவும் காணப்படவில்லை. நாட்டின் சுற்றுவட்டாரத்தில்கூட மேகம் எதுவுமின்றி ஒரே நீலவண்ணமாக இருந்தது ஆகாயம். எனவே விஞ்ஞானத்தின் துணை கொண்டும் அங்கு மழை பெய்யச் செய்ய இயலாது என்று கையை விரித்துவிட்டார்கள் விஞ்ஞானிகள்.

ஞாயிற்றுக்கிழமைதோறும் மாதா கோயில்களுக்குச் சென்று பிரார்த்தனை செய்யும் பெரிய மனிதர்கள் மழை பெய்யாததால் ஏற்பட்டிருந்த துன்பங்களைப் பற்றியே பேசினார்கள். பெரிய மனிதர்கள் மட்டுமல்ல. தொழிலாளிகள், விவசாயிகள், வியாபாரிகள் ஆகிய எல்லோருடைய பேச்சிலும் வறட்சி நிலைதான் முக்கியமாக இடம் பெற்றிருந்தது. பக்கத்து நாட்டிலிருந்து லாரிகளில் தண்ணீரைக் கொண்டு வந்து வீடு வீடாக வழங்கியவண்ணம் இருந்தனர். அன்றாடம் தண்ணீர் ரேஷன் பெறுவதற்காகக் காத்திருப்பதே ஒவ்வொரு வீட்டிலும் முக்கிய வேலையாகப் போயிற்று.

அரிஸோனா நாட்டில் உள்ள பெரிய மாதா கோயிலில் மிகவும் வயதான பாதிரியார் ஒருவர் இருந்தார். ஒரு ஞாயிறன்று பிரார்த்தனை முடிந்தவுடன் அவர் அங்கு பிரார்த்தனைக்கு வந்திருந்தவர்களிடம் ஒரு வேண்டுகோள் விடுத்தார். ''விசுவாசத்துக்குரிய அன்பர்களே! நான் சிறுவனாக இருந்தபோது இதே போல் நெடுங்காலம் மழை பெய்யாமல் இருந்தது. அப்போதுள்ள பெரிய மனிதர்கள் அதோ அந்தப் பெரிய மைதானத்தில் கூடி நின்று 'ஆண்டவரே! வறட்சியால் வாடும் எங்கள் நாட்டில் உடனே மழை பெய்யும்படி அருள் புரிய வேண்டும்' என்று மனம் உருகிப் பிரார்த்தனை செய்தார்கள். நான் என் கண்களால் கண்டேன். பத்தே நிமிஷங்களில் எங்கிருந்தோ மேகங்கள் திரண்டன. நாடு முழுதும் இரண்டு மணி நேரம் பலத்த மழை கொட்டியது. பூமி குளிர்ந்தது. யாவரும் மகிழ்ந்தோம். அதே போல் வருகிற ஞாயிறன்று மாலை ஐந்து மணிக்கு நாமும் அதே மைதானத்தில் கூடி நின்று மழையை வேண்டி ஆண்டவரை நோக்கிக் கூட்டாகப் பிரார்த்தனை செய்வோம்'' என்று கூறி முடித்தார் பாதிரியார். ஏதோ அதிசயத்தைக் காணப் போகிறோம் என்ற ஆவலினால் யாவரும் பிரார்த்தனைக்கு வருவதாக வாக்களித்தார்கள்.

அடுத்த ஞாயிறு வந்தது. அதற்குள்ளாக அரிஸோனா நாட்டு மக்களிடையே கூட்டுப் பிரார்த்தனை பற்றிய செய்தி நன்றாகப் பரவியிருந்தது. எனவே, பிரார்த்தனை மூலம் மழையை வரவழைக்கும் அதிசயத்தைக் காண அன்று ஆயிரக்கணக்கான மக்கள் மாதா கோவிலுக்கு அடுத்த பெரிய மைதானத்தில் வந்து கூடியிருந்தார்கள்.

கூட்டுப் பிரார்த்தனையில் கலந்து கொள்வதற்காக வியாபாரி ஆபிரகாம் ஆடம்பர உடை அணிந்து கொண்டு நான்கு மணிக்கே வீட்டை விட்டுப் புறப்பட்டார். அவர் புறப்படுவதைக் கண்ட அவரது ஆறு வயது மகள் லில்லியும் அவருடன் புறப்பட ஆயத்தமானாள். அவளை அழைத்துக் கொண்டு போக ஆபிரகாமுக்கு இஷ்டமில்லை. போகும் போதும் வரும்போதும் கடை வீதியில் எதையாவது வாங்க வேண்டும் என்று லில்லி பிடிவாதம் பண்ணுவாள். ஆதலால் அவளை எப்படியாவது ஏமாற்றி விட்டுத் தாம் மட்டும் போய்விட எண்ணி, ''லில்லி! அடுத்த தெருவிலுள்ள சார்லஸிடம் போய் இந்தப் புத்தகத்தைக் கேட்டு வாங்கி வா. நீ வரும் வரை நான் இங்கிருக்கிறேன். நீ வந்தவுடன் இருவரும் பிரார்த்தனைக் கூட்டத்துக்குச் செல்வோம்'' என்று அவளிடம் ஒரு சீட்டைக் கொடுத்து அனுப்பினார். லில்லி தன் தந்தை சொன்னதை நம்பினாள். ஆடிப் பாடிக் கொண்டு சார்லஸின் வீட்டுக்குப் போனாள்.

லில்லி புத்தகத்துடன் தன் வீட்டுக்குத் திரும்பி வந்தபோது ஆபிரகாம் அங்கு இல்லை. அவர் தன்னை ஏமாற்றிவிட்டுப் பிரார்த்தனைக் கூட்டத்துக்குப் போய்விட்டார் என்று எண்ணவில்லை அவள். சார்லஸின் வீட்டிலிருந்து தான் வருவதற்கு அதிக நேரம் ஆகியிருக்கலாம்; அதனால் அப்பா அவசரமாகப் புறப்பட்டுப் போயிருக்கலாம் என்றே அவள் நம்பினாள். உடனே உடை மாற்றிக் கொண்டு, தாயாரிடம் சொல்லிவிட்டுப் பிரார்த்தனைக் கூட்டம் நடக்கும் மைதானத்தை நோக்கி வேகமாகப் புறப்பட்டாள். நல்ல மழை பெய்ய வேண்டும் என்பதில் அவளுக்கு மிகவும் ஆசை. 'இறைவனை வேண்டினால் அவர் உடனே மழை பெய்விப்பார். அப்படியானால் மழையில் நனைந்து கொண்டு தானே திரும்பி வரவேண்டும்? அதனால் நான் குடையையும் எடுத்துக் கொண்டு போக வேண்டும்' என்று எண்ணமிட்டவாறு தனது சிறிய குடையை எடுத்துக் கொண்டு ஓடினாள் லில்லி.


மாதா கோவில் மைதானத்தில் கூட்டுப் பிரார்த்தனை அரைமணி நேரமாக நடந்து கொண்டிருந்தது. பாதிரியார் அடிக்கடி எதிரில் மண்டியிட்டுப் பிரார்த்தனை செய்து கொண்டிருந்த பக்தர்களைக் கவனித்துக் கொண்டே, ''ஆண்டவரே, வறட்சியினால் வாடுகின்ற எங்களுக்காக மனமிரங்கி மழையைத் தந்தருளும்'' என்று கூறிக் கொண்டிருந்தார். முழங்கால் வலியைப் பொறுத்துக் கொண்டே மற்றவர்கள் அந்த வாசகத்தை அப்படியே எதிரொலித்துக் கொண்டிருந்தார்கள்.

நேரம் ஆக ஆகப் பக்தர்களின் மனம் சலிப்படைந்தது. 'பத்து நிமிஷங்களில் மழை பெய்யும் என்று பாதிரியார் சொன்னாரே; ஒரு துளி மழைகூட விழவில்லையே?' என்று எண்ணிய அந்தப் பக்தர்கள் ஆகாயத்தையும் பிஷப்பையும் மாறி மாறிப் பார்த்தார்கள். பிரார்த்தனையை அதோடு நிறுத்திக் கொள்ளலாமா என்றுகூடப் பாதிரியார் ஆலோசித்துக் கொண்டிருக்கும்போது சற்றுத் தூரத்தில் ஒரு சிறுமி கூட்டத்தை நோக்கிக் குடையுடன் ஓடி வருவதைக் கண்டார். அவளுடைய உதடுகள் அசைவதையும் கண்டார் பாதிரியார். அவள் பிரார்த்தனை வாசகத்தைத்தான் முணுமுணுக்கிறாள் என்பதையும் ஊகித்தார். அதே சமயம் ஆகாயத்தில் வந்து திரண்டன கரு மேகங்கள். சடசட என்று கனத்த மழை கொட்ட ஆரம்பித்துவிட்டது. பக்தர்களும் பிஷப்பும் தங்கள் உடைகள் நனைந்துவிடுமே என்று அருகிலுள்ள மாதா கோவிலை நோக்கி ஓடினார்கள். சிறுமி லில்லி மட்டும் சாவதானமாகத் தன் குடையை விரித்துப் பிடித்தவாறு ஆண்டவருக்கு நன்றி



கூறிக் கொண்டே, மாதா கோவிலை நோக்கி நடந்து வந்தான்.

பிஷப் தேவாலயத்தினுள் கூடி நின்ற பக்தர்களைப் பார்த்து, ''பக்தர்களே! அதோ குடை பிடித்துக் கொண்டு வருகிற சிறுமி ஒருத்திதான் இறையருளில் உண்மையான நம்பிக்கை வைத்துக் குடையுடன் இந்தப் பிரார்த்தனைக் கூட்டத்துக்கு வந்திருக்கிறான். அவளது தூய உள்ளத்துக்கே இறைவன் இரங்கி இந்த மழையை அருளியிருக்கிறார். 'பிரார்த்தனையால் மழை எங்கே வரப் போகிறது' என்று நம்பிக்கை இல்லாமல் நீங்களெல்லாம் குடை இல்லாமல் வந்திருக்கிறீர்கள். ஆனால் அச்சிறுமியோ...'' என்று கூறி நிறுத்தினார். அதற்கு மேல் பேச முடியாமல் தொண்டை கம்மியது பாதிரியாருக்கு. அதே சமயம் அவளை ஏமாற்றிவிட்டு அங்கு வந்திருந்த அவளுடைய தந்தை ஆபிரகாம் மனிதன் வளர வளர எப்படி இறை நம்பிக்கையை இழந்து வருந்துகிறான் என்பதை எண்ணிக் கண்களில் நீர் பெருகக் கூட்டத்தில் ஒருவராக நின்றார்.



<''ஆ........வ்! மெதுவாக ஊசி குத்துங்க டாக்டர்.''


புகைப்படம்: கலை நாகராஜன்

கீழே-இடம்: நான் புடிச்ச ஆனைக்கு மூணே கால்னு சொன்னா எப்படி? இதோ நாலாவது கால் தெரியுதே?

புகைப்படம்: பி. நாராயணன்

வலம்: குழந்தை ரேணுகா: இப்படி எல்லோரும் 'சளசள'ன்னு பேசினா எப்படிப் புல்லாங்குழல் வாசிக்கிறதாம்?

புகைப்படம்: எஸ்.கே. ரங்கசாமி





மாதுளம் பழமும் மக்குத் துரையும்



காட்டுச்சாலைப் பாதையிலே
கடும்பசியால் வாடி
கோட்டுப்போட்ட துரைஒருவன்
கோயில்போனான் தேடி !

வழிதனிலே மாதுளையை
வைத்துவிற்றான் கூவி !
வழிநடந்து சென்றதுரை
வாங்கிக்கொண்டான் தாவி !

அதற்குவிலை என்னவென்றே
ஆங்கிலத்தில் கேட்டான்.
அதற்குப்பதில், விற்பவனோ
அருந்தமிழில் சொன்னான் !

அத்துரைக்குச் செந்தமிழோ
அணுவுந்தெரி யாது !
இத்துரைக்கு ஆங்கிலமோ
ஏதும்புரி யாது !

ஆதலாலே விலையதற்கே
எட்டணாவாம் என்றான்.
ஏதும்புரி யாததுரை
இரண்டுரூபாய் தந்தான் !

மீதிவாங்க அறிந்திடாமல்
வேகமாகச் சென்றான் !
ஊதியந்தான் என்றுவிற்றோன்
உற்சாகமாய் நின்றான் !

இதற்குமுன்னே மாதுளையை
எங்கும்பார்த்த தில்லை !
அதனாலதைத் தின்னுவிதம்
அறிந்துகொள்ள வில்லை !

மாம்பழத்தைத் தின்பதுபோல்
மாதுளையின் தோலைத்
தான்கடித்துத் துவர்க்குதென்று
சலித்தானந்தத் துரையும்

இனிக்குமென்றே மாதுளையை
ஏமாந்திட்டேன் வாங்கி
வாய்குமட்டித் துவர்க்குதென்றே
வீசியதை யெறிந்தான் !

பாறைமீது பட்டுடைந்து
பளபளக்கும் முத்து
தாறுமாறாய் ஓடியதைத்
தான்வியந்து பார்த்தான் !

ஆகா! என்ன அதிசயங்கள் !
அழகுமுத்துக் குவியல் !
ஓகோஏனோ இதனுள்வந்தே
ஒளிந்ததென்று பார்த்தான் !

சிறுவர்பலர் அதனைக்கண்டு
திமுதிமென ஓடிப்
பொறுக்கியதைத் தின்றுகொண்டே
போட்டார்ஆட்டம் பாடி !

அதனைக்கண்ட துரையும்உடன்
ஆவலாக ஓடி
அதனைத்தானும் பொறுக்கித்தின்று
ஆடினானே பாடி !

தோலைத்தின்று துவர்க்குதென்று
துப்பில்லாமல் சொன்னேன் !
பாலைவிட இனிக்குதிந்தப்
பழம்அடடா! என்றான்.

உண்மையைத்தான் பொய்ம்மைமூடி
உலகில்நம்மை ஏய்க்கும்.
திண்மையாக அதனைத்தேடித்
தெரிந்தால்நன்மை வாய்க்கும் !



கவிஞர் தமிழ்முடி

ஜாதிக்காய்

'ஜாதி மதம் இனம் இவைகளைக் கடந்து மனிதன் வாழ வேண்டும் என்ற இந்தக் காலத்தில் காய்களில் ஜாதியா?' என்று யோசிக்கிறீர்களா? வாசனைத் திரவியங்களில் (மசாலா) ஜாதிக்காய்க்கு ஒரு முக்கியமான இடம் உண்டு. உஷ்ணப் பிரதேசங்களில் விளையும் ஒரு வகை மரத்தினுடைய பழத்தின் கொட்டைக்குள் இருக்கும் பருப்பு இது. இதை ஆங்கிலத்தில் நட்மெக் (Nutmeg) என்பர். நம் நாட்டில் இதை ஜாதிக்காய் என்று சொல்வார்கள். இப்பழத்தின் கதுப்புப் பாகத்தை ஜாதிப்பத்திரி என்பார்கள். செங்காவி நிறமாக இருக்கும். கிழக்கு, மேற்கு இந்தியத் தீவுகள், மொலுக்கா, வாசனைத் தீவுகள், பிரேசில் ஆகிய இடங்களில் ஜாதிக்காய் விளைச்சல் அமோகம். ஜாதிக்காய் மரத்தில் எண்பது வகைகள் உள்ளன. ஒரு வகை இருபத்தைந்து அடி உயரம் வரையில் நேராக வளரக் கூடியது. அடியிலிருந்து நுனி வரை ஏராளமான கிளைகளைக் கொண்டு பசேல் என்று காணப்படும். இதன் பூக்கள் சிறியவையாக நிறத்தில் மஞ்சளாக இருக்கும். இனிய மணமும் உண்டு. எட்டு வயதான மரங்கள் காய்க்கத் தொடங்கும். வருடம் முழுவதும் பூத்துக் காய்க்கக் கூடியது ஜாதிக்காய் மரம். ஆனால் முக்கியமாக அறுவடை செய்யும் காலம் வருடத்தில் மூன்று முறைகள்தாம்.

பேரிக்காய் அளவுக்கு இதன் பழம் இருக்கும். பழுத்த நிலையில் தங்க நிறமாகத் தோற்றம் கொள்ளும், பழத்தை இரண்டாகப் பிளந்தால் உள்ளே சிவப்பான கதுப்புச் சதைப் பற்றுடையதாக இருக்கும். இதுதான் ஜாதிப்பத்திரி ஆகிறது. இதை அடுத்துக் கொட்டை. இந்தக் கொட்டைக்குள் இருக்கும் பருப்பைத்தான் ஜாதிக்காயாக பயன்படுத்துகிறோம். அதன் மணத்தைப் பாதுகாக்க காய்ந்த கொட்டையாகவே ஏற்றுமதி செய்கிறார்கள். உணவுப் பண்டங்களுக்குச் சுவை கூட்டும்போது பருப்பைத் துளைக்கிக் கொள்ளுவார்கள். பழத்தின் கதுப்பைக் கரிய வைத்துப்



கும்பகர்ணப் பூச்சி


பூமியில் வாழும் ஜீவராசிகளோடு ஒப்பு நோக்கும்போது பூச்சிகளின் வாழ்நாளை இயற்கை குறைவாகவே அமைத்துள்ளது. இதற்கு ஏதோ காரணம் இல்லாமல் இராது. ஆனால் ஒரு பூச்சி மட்டும் நீண்ட காலம் வாழும் வரம் பெற்றிருக்கிறது இயற்கையிடமிருந்து. சிக்காடா என்று பெயர் இவ்வகைப் பூச்சிகளுக்கு. நாம் கிராமப்புறங்களுக்குப் போனால் 'சிள்' என்று ஒருவித சத்தம் நிற்காமல் தொடர்ந்து கேட்கும். இதைச் சிள்வண்டு என்று கூறுவார்கள். இந்தப் பூச்சிகள் பதினேழு ஆண்டுகள் உயிர் வாழ்கின்றன. இத்தனை நீண்ட ஆயுள் வேறு எந்தப் பூச்சிக்குமே — கரையான் இனத்து ராணியைத் தவிர கிடையாது. ஆனால் இந்தப் பதினேழு ஆண்டுகளும் இப்பூச்சி பூமிக்குள் தூங்கியே வாழுகிறது. இதன் பிறகு வாழ்க்கையை நுகர வெளிவந்து, சூரிய வெளிச்சத்தில் ஐந்தே வாரங்கள் வாழ்ந்து உடனே மரிக்கிறது.

பெண் சிக்காடா மரக் கிளைகளில் முட்டைகளை இடுகிறது. முட்டையிலிருந்து புழுக்கள் வெளிப்பட்டதும் பூமியில் விழுந்து மண்ணைத் துளைத்துக் கொண்டு போய் வேரோடு ஒட்டிக் கொள்ளுகின்றன. இவைகளுக்கு 'நிம்ப்ஸ்' என்று பெயர். சிக்காடா புழுக்கள் மரத்தின் சாறை உறிஞ்சியபடியே பதினேழு ஆண்டுகள் அசைவற்றுத் தூங்குகின்றன. இதன் பிறகு திடீரென்று ஏற்படும் ஓர் அதிசய உணர்வினால் உந்தப்பட்ட, இவை பூமிக்குள்ளிருந்து வெளிச்சத்துக்கு வருகின்றன. அடி மரத்தின் வழியாக மேலே ஏறுகின்றன. இந்த நிலையில் இவைகளின் மேல் தோல் வெடித்துப் பிளக்க தன் பதினேழு வருஷக் கூட்டை — சட்டையை — உதிர்த்துவிட்டுப் பூரண வளர்ச்சிபெற்ற சிக்காடாவாக-சிள்வண்டாக — வெளிவருகிறது.



காதைத் துளைக்கும் சத்தத்தை உண்டாக்குவது ஆண் சிக்காடாக்கள். பதினேழு வருஷங்கள் வாழும் சிள்ளுப்பூச்சி ஐக்கிய அமெரிக்காவில் மட்டுமே காணப்படுகின்றன. மற்றச் சிள்ளுகளில்

கால்ஃப் ஆட்டம்




இந்த ஆட்டம் தோன்றியது ஸ்காட்லாந்து தேசத்தில் என்று சொல்லுவார்கள். ஆனால் அதன் தோற்றத்தை ஆராய பல நூறு ஆண்டுகள் பின்னுக்குச் செல்ல வேண்டும். ரோம சாம்ராஜ்யத்தில் 'பகானிகா' என்று ஒரு விளையாட்டு புழக்கத்தில் இருந்தது. இதற்குப் பறவை இறகுகள் அடைத்த தோல் பைதான் பந்து. வளைந்த குச்சிதான் கிளப் (மட்டை). பதினான்காம் நூற்றாண்டின் மத்தியில் கால்ஃப் போன்ற ஒரு விளையாட்டை இங்கிலாந்தில் ஆடியதற்கான ஆதாரங்கள் கிடைக்கின்றன. பிரிட்டிஷ் மியூசியத்திலுள்ள பதினான்கும் நூற்றாண்டைச் சேர்ந்த ஒரு புத்தகத்தில் அதில் மூன்று ஆட்டக்காரர்கள் ஒவ்வொருவரும் ஒரு பந்தைக் கிளப்பினால் பூமியிலுள்ள குழிக்குள் தள்ள முயற்சி செய்வதுபோல் ஒரு படம் இருக்கிறது.

பதினைந்தாம் நூற்றாண்டில் கால்ஃப் ஆட்டம் ஸ்காட்லாந்தில் பிரபலமடைந்தது. அதே சமயத்தில் இந்த ஆட்டத்தை விளையாடக் கூடாதென்று சட்டமும் பிறந்தது. மனிதர்களின் ஏராளமான நேரத்தை இவ்விளையாட்டு எடுத்துக் கொள்ளுகிறது; இதனால் வில் வித்தையில் கவனம் பதிவதில்லை, ஞாயிற்றுக்கிழமைகளில் மாதா கோவிலுக்கு வருவோரின் தொகை குறைகிறது என்ற காரணங்களைக் காட்டி இந்த ஆட்டத்துக்குத் தடை விதித்தது அரசாங்கம்.

புராதனமானது, மன்னர்களின் விளையாட்டு என்றெல்லாம் இதற்குப் புகழ் உண்டு. அரசர்கள் கால்ஃபை விரும்பி விளையாடினார்கள். பதினெட்டாம் நூற்றாண்டில்தான் கால்ஃப் கழகங்கள் தோன்றின. முதல் கழகம் தோன்றியது 1744ல் 'ஆனரெரி கம்பெனி ஆஃப் எடின்பரோ கால்ஃபர்ஸ்' என்பது இதன் பெயர். 1754ல் 'ராயல் அண்ட் என்ஷியண்ட் கோல்ஃப் கிளப் ஆஃப் செயிண்ட் ஆண்ட்ரூஸ்' தோன்றியது. இது இவ்விளையாட்டின் விதி முறைகளைத் திருத்தி அமைத்தது. இதன் முடிவுகளை எல்லா கால்ஃப் கழகங்களும் ஏற்றுக் கொண்டன, அமெரிக்காவைத் தவிர. 1951ல் அமெரிக்காவும் இதில் இணைந்தது.

பிட்யூட்டரி சுரப்பி




நம் உடலில் பல சுரப்பிகள் உள்ளன. அவைகளில் பிட்யூட்டரி சுரப்பி என்பது மூளையின் கீழே இருக்கிறது. உடலின் கழிவுகளையும் சக்தி தரும் திரவங்களையும் வெளிப்படுத்தும் அமைப்புக்களுக்கு எண்டாக்ரின் ஸிஸ்டம் (Endocrine System) என்று பெயர். உடலின் பல்வேறு பகுதிகளில் செயல்படும் சுரப்பிகள் இந்த அமைப்பில் இடம் பெறுகின்றன. இந்தச் சுரப்பிகள் உண்டாக்கும் ரசாயனப் பொறிகளுக்கு 'ஹார்மோன்கள்' என்று பெயர். தாங்கள் உண்டாக்கும் திரவங்களை இச்சுரப்பிகள் நேரடியாக ரத்தத்துடன் கலக்கச் செய்து உடல் முழுதும் பரவும்படி செய்கின்றன. உடலின் பல்வேறு இயக்கங்களுக்கு இந்த எண்டாக்ரின் அமைப்புத்தான் காரணம். உடலின் வளர்ச்சி, தாயிடம் பால் சுரக்கச் செய்தல், எண்டாக்ரின் சுரப்பிகளை யெல்லாம் இயங்க வைக்கும் சக்தி முழுவதும் இந்தப் பிட்யூட்டரி சுரப்பியின் கையில்தான் இருக்கின்றன. இத்தகைய சக்தி வாய்ந்த இந்தச் சுரப்பி உருவத்தில் ஒரு பட்டாணி அளவுதான் இருக்கும், நிறையும்கூட பட்டாணியினுடையதுதான். மூளையின் அடிப்பாகத்தோடு இணைக்கப்பட்டு எலும்புகளால் பாதுகாக்கப்படுகிறது இந்தச் சுரப்பி.

இத்தனை சிறியதானாலும் இதில் இரு பாகங்கள் உள்ளன. இவைகளுக்கு 'லோப்ஸ்' என்று பெயர். முன்னால் உள்ளதை 'ஆண்டீரியர் லோப்ஸ்' என்றும் பின்னால் உள்ளதை 'பாஸ்டீரியர் லோப்ஸ்' என்றும் சொல்கிறார்கள். இரண்டில் பாஸ்டீரியர் லோப்ஸ்தான் சிறியது. இது 50,000க்கும் மேலான உணர்ச்சி நரம்புகளால் பின்னப்பட்டு, உடலின் பல்வேறு பகுதிகளுடன் தொடர்பு உடையது.

குழந்தைகளின் வளர்ச்சிக்குக் காரணமான தைராய்டு சுரப்பியை இயக்க வைக்கும் சக்தி பிட்யூட்டரிக்கு உண்டு. இனவிருத்திக்கான ஆதிக்கமும் இந்தச் சுரப்பியினால்தான். உடலின் ஜீவ தத்துவ பரிணாமத்தை (Metabolism) இயக்குவதற்கும் உணவைப் பல்வேறு சக்திகளாக மாற்றுவதற்கும் கிட்னி போன்ற சில உறுப்புக்களின் இயக்கத்துக்கும் பிட்யூட்டரியின் சம்பந்தம் உண்டு.

தெரிந்துகொள்!

தெரிந்துகொள்!



யாரடா அவன்...?

பெ. தூரன்

"கண்ணம்மா! இந்தக் கோடை விடுமுறைக்கு அசோக் இங்கு வருவான்; கடிதம் எழுதியிருக்கிறான்" என்று உற்சாகத்தோடு கூவினான் முத்து. கடிதத்தை இன்னும் அவன் படித்து முடிக்கவில்லை.


"அப்படியா அண்ணா? எங்கே கடிதத்தை என்னிடம் கொடு. நான் படிக்கிறேன். அசோக் வந்தால் ரொம்ப நன்றாக இருக்கும்" என்று மகிழ்ச்சியோடு கூறிக் கொண்டே கண்ணம்மா கடிதத்தைப் பறித்துப் படிக்கலானாள்.

முத்துவும் கண்ணம்மாவும் தங்கள் பெற்றோரோடு கிராமத்திலே வசித்து வந்தார்கள். அந்தக் கிராமத்திலே புதிதாக ஓர் உயர்நிலைப் பள்ளி ஏற்பட்டிருந்தது. அதிலே முத்து ஒன்பதாம் வகுப்பிலும் அவன் தங்கை கண்ணம்மா ஏழாம் வகுப்பிலும் படித்துக் கொண்டிருந்தார்கள். அசோக் இவர்களுடைய அத்தை மகன். அவன் சென்னைமாநகரிலே தன் தாய் தந்தையருடன் இருந்து கொண்டு எட்டாம் வகுப்பில் படித்துக் கொண்டிருந்தான். அவன் கோடை விடுமுறைக்குத் தங்கள் வீட்டுக்கு வருவதை அறிந்து முத்துவுக்கும் கண்ணம்மாளுக்கும் ஒரே குதூகலம்! ஏர் உழுதல், நாற்று நடல், பயிர்களுக்குத் தண்ணீர் பாய்ச்சுதல் - இவற்றையெல்லாம் அசோக் சென்னையிலே பார்த்திருக்க முடியாது. தங்கள் பண்ணைக்கு அழைத்துச் சென்று இவற்றை யெல்லாம் அவனுக்குக் காட்ட வேண்டும் என்று இருவரும் மிகுந்த ஆவலுடன் இருந்தார்கள்.

ஆனால் அசோக் கிராமத்தில் வாழும் மக்களைப் பற்றி யெல்லாம் தாழ்வாகவே மதிக்கிறவன். கிராம மக்கள் பல வகையான மூட நம்பிக்கைகளை உடையவர்கள் என்பதும் விஞ்ஞான அறிவு இல்லாதவர்கள் என்பதும் அவன் கருத்து.

அதனால் அவன் அங்கு வந்து சேர்ந்தது முதற்கொண்டு கிராமத்தில் தான் காணும் ஒவ்வொன்றைப் பற்றியும் அது புதிதாக இருந்தால்கூடப் பழித்துப் பேசியே வந்தான். அத்துடன் அவன், "கிராமத்தில் இருப்பவர்கள் பேய் என்பார்கள்; பிசாசு என்று கூறிப் பயப்படுவார்கள். விஞ்ஞான அறிவு வளர்ந்துள்ள இந்தக் காலத்திலும் இந்தக் குருட்டு நம்பிக்கைகள் போகவில்லை" என்று இடித்துக் கூறிக் கொண்டே இருந்தான். முத்துவுக்கும் கண்ணம்மாவுக்கும் அவன் இப்படிக் குறை சொல்லிக் கொண்டிருப்பதைக் கேட்டுக் கேட்டு அலுத்துப் போய் விட்டது. அவனுக்குச் சரியான பாடம் கற்பிக்க வேண்டும் என்று தங்களுக்குள்ளே தீர்மானம் செய்து கொண்டார்கள்.

சில நாட்களுக்குப் பிறகு அவர்களுக்கு ஒரு நல்ல சமயமும் கிடைத்தது. அவர்களுடைய பெற்றோர்கள் ஏதோ ஒரு திருமணத்துக்காக மற்றோர் ஊருக்குப் போக வேண்டியிருந்தது. மாலையிலே போய் அடுத்த நாள் காலையில் தான் திரும்புவார்கள். வீட்டில் முத்து, கண்ணம்மா, அசோக் மூவருமே இருப்பார்கள். பண்ணையில் வேலை செய்



பவர் ஒருவர் வீட்டுத் திண்ணையிலே இரவிலே படுத்துக் கொள்ளுவார். வீட்டின் உள்ளே நடப்பது அவருக்கு ஒன்றும் தெரியாது. அந்த இரவைப் பயன்படுத்திக் கொள்ள முத்து திட்டமிட்டான்.

தாய் தந்தையர் திருமணத்துக்கு வண்டியிலே சென்ற பிறகு, ''அசோக்! உனக்குப் பேய் என்றால் பயமே இல்லையா?'' என்று கேட்டான் முத்து.

''பேய் இருந்தால்தானே பயப்படுவதற்கு? இதெல்லாம் கிராம மக்களின் மூடநம்பிக்கை'' என்று அசோக் குத்தலாகப் பேசினான்.

''எங்கள் வீட்டுக்குள் கிழக்குப் பார்த்தாற்போல் ஓர் அறை இருக்கிறது, பார்த்தாயா?''

''ஆமாம். எப்பொழுதும் அதை ஏன் பூட்டியே வைத்திருக்கிறீர்கள்? அதில் ஏதாவது தானியம் கிடக்கிறதா?'' - இது அசோக் கேட்ட கேள்வி.

''அந்த அறையிலே ஒரு பேய் வாசம் செய்கிறது. அதனால் நாங்கள் அந்த அறைக்குள் போவதே யில்லை'' என்றான் முத்து.

அசோக் இதைக் கேட்டு இகழ்ச்சியாகச் சிரித்தான்.

''என்ன சும்மா சிரிக்கிறாயே? இன்றிரவு அந்த அறைக்குள் நீ தனியாகப் படுத்துத் தூங்குவாயா?'' என்று கேட்டான் முத்து.

''ஓ, நன்றாகத் தூங்குவேன். எனக்கு என்ன பயம்?'' என்றான் அசோக்.

அந்த அறைக்குள்ளே அசோக் அன்றிரவு தனியாகப் படுத்து உறங்குவது என்று ஏற்பாடாயிற்று.

''அண்ணா! இதென்ன வேடிக்கை? அந்த அறையிலே பேய் இல்லை என்று நமக்குத்தான் தெரியுமே?'' என்று கண்ணம்மா முத்துவிடம் தனியாகக் கேட்டாள்.

''ஒரு வேடிக்கை செய்யப் போகிறேன். நீ பேசாமல் பார்த்துக்கொண்டிரு'' என்றான் முத்து.

''என்ன வேடிக்கை அது? எனக்கும் கொஞ்சம் சொல்லேன்'' என்றாள் கண்ணம்மா.

''என் வகுப்பில் ராமன் என்று ஒரு பையன் படிக்கிறான். அவன் ஒரு கிளியை வளர்த்து வருகிறான். சீழ்க்கை அடித்தால் அது, 'யாரடா அவன்? எங்கடா வந்தாய்! பிடிடா அவனை!' என்று ஒருவிதமான குரலில் கத்தும். அந்தக் கிளியைக் கூண்டோடு வாங்கி வந்திருக்கிறேன்'' என்றான் முத்து. அவன் கண்களில் ஒளி வீசிற்று.

''ஆமாம், அதை வைத்துக்கொண்டு என்ன செய்வாய்?'' என்று ஒன்றும் விளங்காமல் கேட்டாள் கண்ணம்மா.

''அந்தக் கிளிக்கூண்டைக் கிழக்குப் பார்த்த அறையிலே பரண் மேலே வைத்துவிடப் போகிறேன். இரவிலே நடக்கிறதை நீயே பார்த்துக்கொள்.''

''அண்ணா! அசோக் ரொம்பப் பயந்துவிடப் போகிறான். அவனுக்கு ஏதாவது உடம்புக்கு ஆகாமல் போனால் அப்பாவும் அம்மாவும் நம்மேல் கோபிப்பார்கள்'' என்று கண்ணம்மா மிகுந்த கவலையோடு எச்சரிக்கை செய்தாள்.

''அதெல்லாம் ஒன்றும் வராது. நாம்தான் பக்கத்து அறையிலேயே இருக்கப் போகிறோமே?'' என்று சொல்லி முத்து கண்ணம்மாவைச் சமாதானப் படுத்தி விட்டான்.

இரவு அசோக் அந்த அறையில் தனியாகப் படுத்துக் கொண்டான். அறையில் விளக்கு இல்லை. எல்லாம் ஒரே இருட்டாக இருந்தது. வெளியிலே ஒரு சிறு ஒலிகூடக் கேட்கவில்லை. இவையே அசோக்கின் நெஞ்சைக் கலக்கிற்று. ஆர்ப்பாட்டமாகப் பேசினாலும் உண்மையில் அசோக் ஒரு கோழைதான். அதனால் அவனுக்கு இரவு பன்னிரண்டு



மணி ஆகியும் தூக்கமே வரவில்லை. அந்தச் சமயத்திலே சீழ்க்கை ஒலி மெதுவாகக் கேட்டது. அதைத் தொடர்ந்து கிளியின் குரல் ஏதோ பேய் பேசுவதைப் போலக் கிளம்பிற்று.

''யாரடா...அவன்... எங்கேடா வந்தாய்?... பிடிடா அவனை....''

கிளியின் பேச்சைக் கேட்டு அசோக் நடுநடுங்கிப் போய் விட்டான். என்ன செய்வது என்று தெரியாமல் அறையை விட்டு அவன் வெளியே ஓடினான். பசுவுக்குப் போடுவதற்காக வைக்கோல் ஒரு பக்கத்திலே குவித்து வைக்கப் பட்டிருந்ததை அவன் முன்னமேயே பலமுறை பார்த்திருக்கிறான். அங்கே போய் வைக்கோலைத் தன் மேலே போட்டு மூடிப் பதுங்கிக் கொண்டான் அசோக். முத்துவும் கண்ணம்மாவும் பின்னாலேயே ஓடி வந்தனர். வைக்கோலை அப்புறப்படுத்தத் தொடங்கினார்கள். அதனால் சரசரவென்று சத்தம் உண்டாகவே, ''ஐயோ, பே...பேய்...'' என்று அலறினான் அசோக்.

முத்துவும் கண்ணம்மாவும் உரக்கச் சிரித்தார்கள். அப்பொழுதுகூட அவனுடைய பயம் தீரவில்லை. அவன் உடம்பெல்லாம் வியர்வை பொங்கி வழிந்தது. அசோக் இப்பொழுது நல்ல பாடம் கற்றுக் கொண்டான்.

அடுத்த நாள் முதற்கொண்டு அசோக் முற்றிலும் மாறிவிட்டான். பட்டணத்து நாகரிகத்தைப் பற்றி உள்ளுக்குள்ளே உயர்ந்திருந்த உயர்வு எண்ணம் மறைந்து விட்ட பிறகு அசோக் எவ்வளவு நல்லவன் என்பதை முத்துவும் கண்ணம்மாவும் தெரிந்து கொண்டார்கள். அதனால் அசோக் விடை பெற்றுத் திரும்பும்போது மூன்று பேர்களுடைய கண்களுமே கலங்கிவிட்டன.



என்ன விநோதம் பார்...!

□ □ □ □ □ □



என்ன சிரிப்பு?

சிரிப்பு தேகத்துக்குப் புத்துணர்ச்சி அளிக்கிறது. பசியையும் ஜீரண சக்தியையும் இரத்த ஓட்டத்தையும் அதிகரிக்கச் செய்கிறது! கண்ணுக்கு ஒளியையும் முகத்துக்குக் களையையும் கொடுக்கிறது. சிரிப்பின் மூலம் பிராணவாயு ஏராளமாகக் கிடைக்கிறது! சாதாரணமாக நாம் ஒரு முறை மூச்சு இழுத்துவிடும் பொழுது நமது நுரையீரல்களில் கிரகிக்கப்படும் காற்றை விட ஏழு மடங்கு அதிகக் காற்று நாம் சிரிக்கும் பொழுது கிரகிக்கப்படுகிறது! அதிகமாகச் சிரிப்பது ஆண்களா, பெண்களா? ஆண்கள்தாம்!

மானா, மனிதனா?

உலகில், நாவில் அதிகமான சுவை அரும்புகளைக் கொண்டிருப்பது மனிதனல்ல! மான்தான்! அதன் நாவில் 50,000 சுவை அரும்புகள் இருக்கின்றன! மனிதனின் நாவில் 3,000 சுவை அரும்புகள்தாம்! எனவே, அதிகமாகச் சுவைத்து உண்பது மனிதனல்ல; மான்தான்!



எகிறி குதிக்கும் எலி!

பாலூட்டிகளில் மிகவும் சிறியது எலிதான். ஆப்பிரிக்கப் பாலைவனத்தில் வாழும் நான்கு அங்குல நீளமே உள்ள 'ஜெர்போவா' என்னும் எலி ஒரே தாவலில் பதினைந்து அடி தூரம் தாண்டும்! உடலையும் தாண்டும் தூரத்தையும் ஒப்பிடும் போது உலகில் வேறு எந்தப் பிராணியும் இவ்வளவு தூரம் தாண்டுவதில்லை. அதனுடன் ஒப்பிடும் போது மனிதன் சுமார் 250 அடி தூரமாவது தாண்ட வேண்டும். ஆனால், மனிதன் அதிக பட்சம் தாண்டும் தூரம் இருபத்தேழு அடிதான்!


சிரிக்கச் சிரிக்க!
தபால்காரர் நாயனக்காரர் மகனிடம்: தம்பி, உங்க அப்பா இருக்காரா? என்ன செய்கிறார்?
பையன்: இருக்காரு. 'பீப்பீ' வாசிச்சுக்கிட்டிருக்கார்.
தபால்காரர்: அவர்கிட்டே போய் ஓ பீப்பீ. வந்திருப்பதாகச் சொல்லு.
— என். ஜம்புநாதன்
"எசமான், கடிகாரத்துக்கு சாவி கொடுக்கச் சொன்னீங்களே? கொடுத்தால் வாங்க மாட்டேங்குதுங்க."
— இரா. மணிவண்ணன்
"ஏய், தண்டு! நீ உங்கப்பாவை விடப் பெரியவன்டா!"
"எப்படி...?"
"உங்கப்பா வெறும் பிரசங்கி, நீயோ அதிகப் பிரசங்கி!"
— சு. சிவராமன்
"ஏன்டா, மதுரையைக் கண்ணகி எரித்ததிலிருந்து உனக்கு என்ன தெரிகிறது?"
"அந்தக் காலத்தில் தீயணைக்கும் படை இல்லை என்று தெரிகிறது சார்!"
— ஜெராமி
"அய்யா, சாமி! பிச்சை போடுங்க..."
"அய்யாசாமி பக்கத்து வீட்டுக்காரர், அங்கே போய்க் கேளு...!"
— ஜி. கிருஷ்ணன்
முயல்: ஏ, கரடி...
கரடி: அடி, புடின்னு கூப்பிடறியே, நான் ஆண் பிள்ளையாக்கும்?
முயல்: அப்படியா? சரி, ஏ கரடா...!
— சாதுல்



எனக்கு இன்னுமொரு பாரி மிட்டாய் தா!

Parry's

குழந்தைகள் எப்போதும் விரும்புவது பாரி மிட்டாய்கள். அவர்கள் இழக்கும் சக்தியை திரும்பவும் உடனுக்குடனே வழங்குபவை பாரி மிட்டாய்கள். அவை புத்தம் புதியவை. சத்துள்ளவை. ருசிமிக்கவை.


தயாரிப்போர்: பாரிஸ் கன்பெக்ஷனரி லிமிடெட், சென்னை-1


PRS-6396

மக்கள் திலகம் 'எம்ஜியாரை' வரையுங்களேன் —தாணு



அடுத்த இதழில் யார்?


13
ஷீலாவைக் காணோம்
கதை.. வாண்டுமாமா
சித்திரம்.. ரமணி..
திடீரென்று, கரடியைக் கண்டு மிரண்ட குதிரையிலிருந்து ஷீலா கீழே விழுந்தாள். கரடி உறுமியபடி அவளை நெருங்குகிறது.
குதிரை ஓடி விட்டது. கீழே விழுந்து கிடக்கும் ஷீலாவைக் காப்பாற்ற டைகர், கரடியை நோக்கி உறுமியது.
அந்தப் பெரிய கரடியின் முன் டைகர் எம்மாத்திரம்? எவ்விப் பாய்ந்த டைகரைக் கரடி அலட்சியமாகத் தூக்கி எறிந்தது. ஆனால் ஷீலா அதற்குள் தப்பி ஒரு மரத்தில் போய் ஏறிக் கொண்டாள்.
கரடி மரத்தினடியில், ஷீலா மரத்தின் மீது. அதே சமயம் சுருண்டு கிடந்த டைகரை நோக்கிக் கரடிக் குட்டி வருகிறது...
வா.. வா! என் ஷீலாவைக் காப்பாற்ற நீ பயன் படுவாய்.
தன் குட்டி மீது டைகர் பாய்வதைக் கண்ட பெரிய கரடி ஷீலாவை விட்டு டைகரை நோக்கிப் பாய்கிறது..


ஓடி வா! நான் எதிர்பார்த்தது தானே. உன் கவனத்தைத் திருப்புவதற்காகத் தான் உன் குட்டி மீது பாய்வது போல் பாவலாக் காட்டினேன்.
சிறிது தூரம் கரடியை இழுத்தடித்த டைகர், குறுக்கிட்ட ஓர் ஓடையைத் தாவிக் கடந்து அதனிடமிருந்து தப்புகிறது...
டைகர், என் அருமை டைகர்! உன்னைக் கண்டதும் தான் எனக்கு உயிர் வந்தது. கரடியிடமிருந்து எப்படித் தப்பினாய்?
ஓடிப் போன குதிரையைக் கண்டு பிடித்தாக வேண்டும்.. இதோ அதன் குளம்படிகள்.. இப்படித்தான் ஓடி இருக்கிறது. எவ்வளவு தூரம் போயிருக்குமோ..?
குதிரையைக் கண்ட ஷீலா அதனிடம் ஓட முயன்ற போது டைகர் அவளது உடையைப் பற்றி இழுத்து நிறுத்தியது...
அவசரப்படாதே ஷீலா! தன்னிச்சையாக ஓடிய குதிரை மரத்தில் கட்டப் பட்டிருப்பானேன்? இதில் ஏதோ சூழ்ச்சி இருக்கிறது. பின்னுக்கு வா..
தொடரும்..



முதலைக் கண்ணீர்! ★ வாண்டுமாமா

பிடரியனைத் தெரியுமா உங்களுக்கு? நீங்கள் காட்டுக்குப் போயிருந்தாலல்லவா பிடரியனைப் பற்றித் தெரிந்திருக்கும்? அந்தக் காட்டின் ராஜா அவன் தான். சிம்மேந்திரன் என்று பட்டப் பெயர். ஆனால் கூப்பிடுவதென்னவோ பிடரியன்! பெயருக்கு ஏற்றபடி கம்பீரமான சிங்கம். அவனுடைய பிடரியின் அழகு உண்டே, ரொம்பப் பிரமாதம்!

ஒரு நாள் பிடரியன் — அதாவது சிங்க ராஜா — தன் கால் நகங்களைப் பாறையில் கூர் தீட்டிக் கொண்டிருந்தான். அப்போதுதான் அது நிகழ்ந்தது. 'சிக்கி முக்கிக் கற்களைத் தட்டி நெருப்பு உண்டாக்குவார்கள் ஆதி காலத்து மனிதர்கள்' என்று புத்தகத்தில் படித்திருக்கிறீர்கள் இல்லையா? அதேமாதிரி பிடரியன் தன் நகத்தைப் பாறையில் கூர் தீட்டும்போது நெருப்புப் பொறி பறந்தது. ஐயோ, எப்படிச் சொல்லுவேன்?

நகத்திலிருந்து கிளம்பிய நெருப்புப் பொறி சிங்கத்தின் பிடரி மயிரிலே பட அது குப்பென்று தீப்பிடித்துக் கொள்ளப் பிடரியன் ஓடினான், அலறிக்கொண்டு ஒரு குட்டையை நோக்கி. ம்...ஆனால் அதற்குள் காரியம் மிஞ்சி விட்டது. பிடரியன் குபுக்கென்று தலை குப்புறக் குட்டைக்குள் பாய்ந்து மூழ்கிய பின் மெள்ளத் தலையைத் தூக்கினான். அவன் தலைக்கு மேலே கறுப்புப் புகை சிறு மேகமாக மிதந்து சென்றது. பிடரியன் நடுங்கும் தன் கைகளை மெள்ளக் காதோரமாகக் கொண்டு போனான். என்ன நடந்திருக்கும் என்பது அவனுக்குத் தெரிந்திருந்தாலும் அதை அறிந்து கொள்ள மனங் கலங்கினான். காதோரம், பின் பக்கம், உச்சந்தலை... அவன் கைகள் நடுங்கியபடியே பரபரப்புடன் தடவின. ''ஐயோ!'' என்று வாய் விட்டுப் புலம்பினான். சிங்கம் கர்ஜிப்பதைத்தான் கேட்டிருப்பீர்கள். அழுவதைக் கேட்டிருக்க மாட்டீர்களே. ரொம்பப் பரிதாபமாக இருக்கும். அதுவும் பிடரி மயிரைப் பறிகொடுத்த பிடரியனின் அழுகை ரொம்ப ரொம்பப் பரிதாபமாக இருந்தது.

''என்ன செய்வேன்? என் வாழ்வே பாழாகி விட்டதே! இனி என்னை யார் மதிப்பார்கள்? இந்த நிலையில் உயிரோடிருப்பதை விடச் செத்திருக்கலாமே? ஈசுவரா! இது என்ன வேதனை, இப்படியும் ஒரு சோதனையா? யாரும் என்னுடைய இந்த அவல நிலையைப் பார்த்து விடுமுன் நான் எங்காவது ஒளிந்து கொண்டு விட வேண்டுமென்று குட்டை நீரிலிருந்து எழுந்து பதுங்கிப் பதுங்கி ஓடினான். சற்றுத் தொலைவில் ஒரு பட்டுப் போன மரம் இருந்தது. அதில் ஒரு பெரிய பொந்து. அதற்குள் தலையை நுழைத்துக் கொண்டான். உடல் முழுதும் உள்ளே போக இடமில்லை, அந்த மரத்தில்.

அந்தச் சமயத்தில்தானா வம்புக்காரியான மரங்கொத்தி அந்தப் பக்கமாக வர வேண்டும்? ஊர் வம்புதான் அதற்கு உணவு. பெரிய மூக்கினால் டொக் டொக் கென்று மரங்களைத் தட்டிச் செய்திகளைக் காடு முழுதும் பரப்பி விடுவாள். பெரிய வாயாடி.

''என்ன பிடரியாரே! ஒளிந்து பிடித்து விளையாடுகிறீரா? நானும் வரட்டுமா?'' என்று கேட்டுச் சிங்கம் பாதி உடலை நுழைத்துக் கொண்டுள்ள அந்தப் பட்டுப்போன மரத்தில் போய் உட்கார்ந்தது. அதிலிருந்த இன்னொரு துவாரத்தின் வழியே தனது நீண்ட மூக்கை நுழைத்து உள்ளே பார்க்குது. அவ்வளவுதான்; அடுத்த விநாடி... ''ஐயையோ! சிங்கனாரே! இதென்ன கோலம்? எங்கே உமது கம்பீரமான பிடரி? மாயமாக மறைந்து விட்டதே! வழுக்கைத் தலையாக... இது எப்படி ஏற்பட்டது? சொன்னால்தான் நான் இங்கிருந்து போவேன்'' என்றது வம்புக்கார மரங்கொத்தி.

பாவம், பிடரியன்! பிடரியை இழந்து அவமானத்தினால் குன்றிப் போயிருக்கும்போது இவளிடம் வேறு மாட்டிக் கொண்டோமே என்று வேதனைப்பட்டான். என்ன செய்வது? அவளிடம் நல்லதனமாக நடந்து கொள்ளாவிட்டால் இன்னும் மோசமாகிவிடும். ஆகவே தனக்கு ஏற்பட்ட பிடரி இழப்பை அழுது கொண்டே விவரிக்



தான் சிங்கன். முடிவில் ''மூக்கி, உன்னை ரொம்பக் கெஞ்சிக் கேட்டுக் கொள்கிறேன். இதை யாரிடமும் சொல்லி விடாதே!'' என்று வேண்டிக் கொண்டான்.

''இருந்தாலும் உன் நகத்தை நீ அவ்வளவு கூராகத் தீட்டியிருக்க வேண்டாம். சரி, நான் இதை யாரிடமும் சொல்லவில்லை'' என்று பறந்தது மரங்கொத்தி. எங்கே? காடு முழுதும் இந்தச் செய்தியைப் பறைசாற்றத்தான்!

அடுத்த பத்தாவது நிமிஷத்தில்... பிடரியனின் பிரஜைகளும் நண்பர்களும் சாரி சாரியாக அந்தப் பட்ட மரத்துக்கு — அந்தப் பரிதாபமான காட்சியைக் காண வர ஆரம்பித்தார்கள். கிழட்டு யானை, நெட்டை ஒட்டைச் சிவிங்கி, சிரிக்கும் கழுதைப் புலி, கோவேறு கழுதை, காண்டாமிருகம், மான்பசு, வேங்கைப் புலி, இவர்களோடு அந்த வாயாடி மரங்கொத்தியும் வந்தது.

''சிங்கா! வா வெளியே. உன்னைப் பார்க்க எல்லாரும் வந்திருக்கிறார்கள்'' என்று கூப்பிட்டது மரங்கொத்தி. பட்ட மரப் பொந்திலிருந்து பேச்சு மூச்சே இல்லை

'' வாப்பா, பிடரியா...! உன்னை நாங்கள் கேலி செய்ய வரவில்லை. பரிகாரம் காணத்தான் வந்திருக்கிறோம். சங்கோஜப்படாமல் உன் அழகிழந்த தலையைக் காட்டு'' என்றது யானை பரிவுடன்.

''இதில் வெட்கப்பட என்ன இருக்கிறது. நீ திரும்பப்பா'' என்றது சிவிங்கி.

இதற்கு மேலும் அடம் பிடிக்க அத்தனை அசடா பிடரியன்? சிலிர்த்துக்கொண்டு தலை நிமிர்ந்து நிற்கும் சிங்கம் இப்போது வழுக்கைத் தலையைத் தொங்க விட்டபடி வருத்தத்துடன் தன் தோழர்களைக் காணவே கூசியது.

''ரொம்பக் கோரமான காட்சிதான்'' என்று நிஜமாகவே வேதனைப் பட்டது யானை. சிங்கத்தின் தலையை, பிடரியைச் சோதித்த பிறகு, ''இனிமேல் மறுபடியும் முடியே வளராது போலிருக்கே! மறுபடியும் பிடரி வளர வேறு ஏதாவது வழி இருக்கிறதா என்றுதான் பார்க்க வேண்டும்?'' என்றது.

ஒவ்வொரு பிராணியும் ஒரு வைத்தியம் சொல்லி ரகளை செய்தன.

''இந்த மாதிரிக் கேஸுக்கு ஒரு சிகிச்சை இருக்கு. சட்டென்று நினைவுக்கு வரவில்லை. கொஞ்சம் பொறுங்கள்'' என்று தனது முறம் போன்ற காதை இப்படியும் அப்படியுமாக ஆட்டிக் கொண்டே. வெகு நேரம் யோசனை செய்த யானை திடீரென்று ''ஆ! நினைவுக்கு வந்து விட்டது... முதலையின் கண்ணீர்!'' என்று கத்தியது.

''வடக்குக் கோடியில் இருக்கும் சதுப்பு நில ஏரியிலே முதலைகள் இருக்கு. குரங்குப் பாறையோடு ஏழெட்டு மைல் நடந்தால் அந்த ஏரிக்குப் போகலாம்'' என்றது வாயாடி மூக்கி.

''அது ரொம்பப் பயங்கரமான இடம்!'' என்றது பசுமான்.

''அந்தப் பக்கம் யாருமே போக மாட்டார்கள்'' - இது வேங்கையின் விமரிசனம்.

''அட, கிளம்புங்கப்பா! ஏன் இப்படிப் பயந்து சாகறீங்க? ஒரு சின்னப் பக்கெட்டைக் கொண்டு வாங்க. காரியத்திலே இறங்க வேண்டிய தருணம் இது'' என்றது யானை.



காரியம் என்று வந்தபோது ஒவ்வொன்றும் ஒரு நொண்டிச் சாக்கைச் சொல்லித் தட்டிக் கழித்தன.

அவ்வளவையும் மௌனமாகக் கேட்டுக்கொண்டிருந்த யானை கடுப்போடு, ''நீங்க யாரும் வர வேண்டாம். நானே போகிறேன். ஆபத்தில் உதவுபவன் தான் உண்மையான நண்பன்'' என்று துதிக்கையில் பக்கெட்டை மாட்டிக் கொண்டு குரங்குப் பாறைப் பக்கமாக நடந்தது யானை. அதன் காதுகள் முன்னும் பின்னும் சாமரம் வீச, பின்னால் வால் அதற்கு ஏற்ப அசைய முதலைக் கண்ணீர் கொண்டு வரக் கிளம்பிவிட்டது கஜேந்திரன்.

சதுப்பு நில ஏரிக்குப் போகும் பாதை அப்படி யொன்றும் மோசமாக இல்லை. சில மரங்களை முட்டித் தள்ளிக்கொண்டு போக வேண்டியிருந்தது. யானைக்கு அது ஒன்றும் பெரிய தடங்கலாகப் படவில்லை. சீக்கிரமே சதுப்பு நில ஏரிக்கு வந்துவிட்டது.

சுற்று முற்றும் பார்த்தது யானை. யாரையும் காணோம். 'ஏரியின் அந்தக் கரையில் இருக்குமோ முதலைகள்?' சகதி நிறைந்த இந்த ஏரிக்குள் இறங்கியல்லவா அக்கரை போக வேண்டும்? பிடரியனையும் அவனது பரிதாபமான நிலையையும் நினைத்துக் கொண்டதும் யானை யோசிக்கவில்லை. சதுப்பு நில ஏரிக்குள் சட்டென்று இறங்கியது. நீர்க் கொடிகளையும் பூண்டுகளையும் துதிக்கையால் பிடுங்கி எறிந்தபடி முன்னேறியது. சேற்றில் கால்கள் புதைந்தன. உடம்பெல்லாம் சகதி. ஆனாலும் யானை கலங்கவில்லை. ஏரியில் ரொம்பச் சிரமப்பட்டு வெகு தூரம் போனதும் தூரத்தில் ஒரு கட்டை மிதந்து கொண்டிருப்பதைக் கண்டது. கட்டைதானா அது?

'கட்டைக்குக் கண் இருக்குமா என்ன? கால்களும் விரல்களும் கூட இருக்கின்றனவே. கட்டை வாயைத் திறந்தால் நீண்ட வரிசைப் பற்கள் வேறு இருக்கின்றன. இது கட்டையல்ல.. தேடி வந்த முதலைதான்' என்ற முடிவுக்கு யானை வரவும், ''வாருமய்யா, கஜேந்திரரே! பழைய கதையை நினைத்துக்கொண்டு வந்தீரா? உமது காலை மறுபடியும் கௌவ எனக்கென்ன பைத்தியமா? எதற்காக இவ்வளவு தூரம் வந்தீர்?'' என்று கேட்டது முதலை, நீரினுள்ளிருந்து எழுந்து ஒரு பாறையின் மீது சாய்ந்து உட்கார்ந்து கொண்டபடி.

''உன் கண்ணீரைக் கொஞ்சம் கேட்டு வாங்கிப் போகலாமென்று வந்திருக்கிறேன்'' என்றது யானை, பக்கெட்டைக் காட்டி.


''மன்னிக்கணும். ஏனோ இப்பொழுதெல்லாம் எனக்குக் கண்ணீர் வருவதில்லை. போன வாரம் தவறுதலாக என் நண்பன் ஒருவனை விழுங்கி விட்டேன். விஷயம் தெரிந்ததும் மனசுக்குக் கஷ்டமாகத்தான் இருந்தது. ஆனாலும் கண்ணீர் வரவில்லை. அது சரி, என் கண்ணீர் உனக்கு எதற்கு?'' என்று கேட்டது முதலை.

''உன் கண்ணீர் எனக்கில்லை. சிம்மேந்திரனை பிடரியனுக்கு'' என்ற யானை பிடரியனுக்கு நேர்ந்த கதியை விவரித்தது. அதைக் கேட்ட முதலை 'ஹோ ஹோ' என்று சிரிக்கலாயிற்று. தனது பெரிய வாயைத் திறந்தபடி 'கக்கக்கக்' என்று சிரித்தது. விலாவெல்லாம் வலி எடுக்கச் சிரித்தது. அதனால் சிரிப்பை அடக்கவோ நிறுத்தவோ முடியவேயில்லை. பாறை மீது புரண்டு புரண்டு சிரித்தது. அப்போது...

அதன் கண் ஓரத்தில் கண்ணீர் சுரக்கலாயிற்று. கண்ணீர் உருண்டு திரண்டு அதன் நீள முகத்தில் பச்சையாக வடியலாயிற்று. யானைக்கு மகிழ்ச்சியான மகிழ்ச்சி. சட்டென்று பக்கெட்டை நீட்டி முதலைக் கண்ணீரைச் சேந்திக் கொண்டது. முதலை சிரித்துச் சிரித்துச் சோர்ந்து போய் ஒரு வழியாக நிறுத்தியபோது யானையின் பக்கெட்டும் முதலைக் கண்ணீரால் நிரம்பி இருந்தது!

''இது போதும்... இன்று இரவுக்குள் பிடரியனின் பிடரி மயிர் வளர்ந்து விடும். ரொம்ப நன்றியப்பா உனக்கு. நீ இத்தனை கருணை உள்ளவன் என்று நான் நினைக்கவில்லை'' என்று பாராட்டி விட்டு விடைபெற்றுக் கொண்டு கிளம்பியது யானை.

திரும்பும்போது பிரயாணம் கொஞ்சம் கஷ்டமாகவே இருந்தது. கையில் முதலைக் கண்ணீர் பக்கெட். அதோடு மூடு பனி வேறு. ஈசல்களும் குளவி





களும் ஏராளமாகப் பறந்து வந்து முகத்தில் தாக்கின. ஏரியில் ஒரு நீர் யானை மீது இடறிக் கீழே விழுந்தது. நல்ல வேளையாகப் பக்கெட் கவிழவில்லை. யானைக்கு முழங்காலில் காயம். ஏரியிலிருந்து கரை யேறிக் காட்டு வழியே வரும்போது ஒரு முட்செடியில் காது மாட்டிக் கொண்டு கொஞ்சம் சிராய்ப்பு ஏற்பட்டது. இப்படி ஒரு வழியாக யானை முதலைக் கண்ணீருடன் பிடரியனிடம் வந்து சேர்ந்தது.

மிருகங்களுக்கெல்லாம் வியப்பான வியப்பு. 'ஒரு சொட்டு முதலைக் கண்ணீர் கூடக் கிடைக்காதென்று அவை எண்ணி இருந்தது போக, ஒரு பக்கெட் கண்ணீரா? அது எப்படி?' என்று எல்லாம் யானையைச் சூழ்ந்து கொண்டன.

''எப்படியோ கொண்டு வந்தேன். உங்கள் உடம்பெல்லாம் சௌக்கியமா இப்போ? வழி விடுங்கள். சிங்கா, இந்த முதலைக் கண்ணீருக்குள் உன் கைகளை முக்கி உச்சந்தலை, பிடரி எல்லா இடத்திலும் - காதை விட்டு விட்டு - தடவிக்கொள். பிறகு அமைதியாக ஓர் இடத்தில் போய் உட்கார்ந்து கொள். கொஞ்ச நேரத்துக்கெல்லாம் எப்படிச் செழித்து வளர்கிறது பார், உன் பிடரி?'' என்றது யானை.

சிங்கமும் யானை கூறிய முறைப்படி முதலைக் கண்ணீரைத் தலை, கழுத்து, பிடரி, கன்னம் எல்லா இடங்களிலும் தடவிக் கொண்டு ஒரு பாறையின் மீது ஏறி அமர்ந்து கொண்டது. அதைச் சூழ்ந்து எல்லா மிருகங்களும் ஆவலே வடிவாக அமர்ந்து கொண்டன. பிடரியனின் வழுக்கைத் தலையில் முதல் முடி முளை விட்டுக் கிளம்பும் அதிசயத்தைக் காண அவைகளுக்கு அத்தனை துடிப்பு.

ஒரு நிமிஷம், இரண்டு நிமிஷம், மூன்று நான்கு... ம்ஹூம். எந்த அற்புதமும் நிகழவில்லை. சிங்கத்தின் தலை முன்போல் அசிங்கமாகவே இருந்தது.

''இதெல்லாம் சுத்த முட்டாள்தனமைய்யா. முதலைக் கண்ணீராவது முடி வளர்ப்பதாவது?'' என்றது மரங்கொத்தி.

''ஆமாம்... சுத்தப் பித்தலாட்டம்'' என்றது காண்டாமிருகம்.

''அதுக்குள்ளே ஏன் இப்படி ஆளுக்கொரு முடிவாகச் சொல்லி அவசரப் படறீங்க? முடி வளருகிற விஷயம் லேசா என்ன?'' என்றது யானை.

எல்லாம் சிங்கத்தையே பார்த்துக் கொண்டு உட்கார்ந்திருந்தன. இரவு வந்தது. நேரம் ஓடிக் கொண்டிருந்தது. மிருகங்களுக்குப் பசியும் கொட்டாவியும் வந்தன. ஆனால் பிடரியனுக்குப் பிடரிமயிர் மட்டும் முளைக்கவில்லை. ஆய்ந்து ஒய்ந்து போன மிருகங்கள் அப்படியப்படியே தரையில் தூங்கி விழுந்தன. பிடரியனின் கண்களும் சொக்கிச் செருகலாயின. வானத்தில் சந்திரன் மட்டும்தான் இவர்களைப் பார்த்துக் கொண்டிருந்தான்.

அப்போதுதான் அந்த அதிசயம் நிகழ்ந்தது. முதலைக் கண்ணீருடன் சந்திர ஒளியும் சேர வேண்டும் என்பது யானைக்குத் தெரியாது. எல்லா மிருகங்களும் தூங்கியதும் சந்திரனின் கிரணங்கள் பிடரியனின் உடலில் பட்டதும் முடி முளைவிடலாயிற்று. அடர்த்தியாக வளர்ந்தது. வேகம் வேகமாக வளர்ந்தது. பத்து விநாடிகளுக்குள் பிடரியன் பழைய பிடரியனாகி விட்டான். ஆனால் அது தெரியாமல் அவனும் ஆழ்ந்த உறக்கத்தில் இருந்தான். இதுவரையில் சரிதான். இனிதான் விபரீதம் நிகழ்ந்தது.

பிடரியனின் பிடரி முடி வளருவது நிற்கவில்லை. அது வளர்ந்து கொண்டே இருந்தது. அலை அலையாக நாலா திசைகளிலும் சிங்கனின் பிடரி மயிர் வளர்ந்து பொதி பொதியாக வழிந்து கொண்டே இருந்தது. வளைந்து வளைந்து சுருண்டு நீண்டு முடி பெருகிக் கொண்டே போயிற்று. தூங்கிக் கொண்டிருந்த மிருகங்களையெல்லாம் சிங்கனின் பிடரி மயிர் மூடிவிட்டது. அதன் பிறகு அருகிலிருந்த மரங்களின் மீது பற்றிப்படரலாயிற்று கொடியைப் போல. தன் வழியில் எது இருந்தாலும் அதைப் பற்றி வளர்ந்து சுற்றிக் கொண்டு போய் ஒரு





நிலையில் தானாக நின்றது. காலைக் கதிரவனின் ஒளியில் தங்கமயமாகத் தகதகத்துக் கொண்டிருந்தது பிடரியனின் முடி கானகமெங்கும்!

முதலில் கண் விழித்தது மரங் கொத்தி தான். "ஐயையோ! இது என்ன, உலகம் முழுவதும் ஒரே முடிக் காடாக.... ஏய்... பிடாரியாரே... இல்லை, பிடரியாரே... எழுந்திரும்.... யானையாரே, சிவிங்கியாரே, எல்லாரும் எழுந்திருங்க. எங்கே இருக்கீங்க? முதலைக் கண்ணீரோட வேலையைப் பாருங்க!" என்று கூச்சலிட்டது.

மிருகங்கள் எல்லாம் மெதுவாகக் கண் விழித்து, சோம்பல் முறித்துக் கொண்டு எழுந்திருக்க முயன்றன. ஆனால் முடியவில்லை. அவைகளின் உடலைத்தான் பிடரியனின் முடி சுற்றிக் கொண்டு கிடந்ததே. சிங்கனும் கண் விழித்தான். அவனுக்கு மகிழ்ச்சியான மகிழ்ச்சி. "அதிசயத்திலும் அதிசயம். ஆனால் கொஞ்சம் அதிகப்படியாகவே முடி வளர்ந்துவிட்டதே!" என்றான்.

"கொஞ்சமா? பயங்கரம், படு பயங்கரம். காடு முழுதும் உன் திருமுடி தானப்பா. கண்களைத் திறந்து பார்!" என்று கத்தியது காண்டா மிருகம்.


"எங்களை யெல்லாம் உன்னுடைய பிடரி மயிர் சிறைப்படுத்தி விட்டதப்பா. நாங்கள் எப்படி இதிலிருந்து விடுபடப் போகிறோமோ, தெரியவில்லையே?....." எல்லா மிருகங்களும் கூச்சலிட்டன. ஆனால் யானை மட்டும் "அமைதி, அமைதி! ஏன் இந்தக் கூச்சல்? என்ன ஆகிவிட்டது இப்போது?" என்று கேட்டது.

"ஒன்றும் ஆக வில்லை. எல்லோரும் சேர்ந்து என் பிடரியைப் பிடித்து இழுக்கிறீர்கள். எனக்கு வலி தாங்கவில்லை. அவ்வளவுதான்!" என்றான் சிங்கன்.

"பிடரி முடிக் காட்டில், இல்லை கூட்டில் நாம் சிக்கிக் கொண்டோம். இப்போது நமக்குத் தேவை ஒரு கத்தரிக்கோல். அது மட்டும் இருந்தால் இந்தக் குளறுபடி வலையிலிருந்து விடுபட்டு விடலாம்" என்றது யானை.

மரங்கொத்தி மரக்கிளையிலிருந்ததால் அது இந்த முடிக்குள் முடங்க வில்லை. "கத்தரிக்கோல் வைத்திருக்கும் நபரை எனக்குத் தெரியும். ஒரு பாபூன் (குரங்கு) முடி திருத்தகம் வைத்திருக்கிறது. இந்த மாதிரிக் காடாக வளர்ந்திருக்கும் முடிகளை வெட்டுவதில் அதற்கு ஒரே குஷி. நீங்களெல்லாம் இப்படியே இருப்பதானால் நான் இப்போதே போய் அந்தப் பாபூனை இங்கு அழைத்து வருகிறேன்" என்றது வாயாடி. அப்படியே செய்யும்படி எல்லாம் வேண்டிக் கொள்ள மரங் கொத்தி பறந்து சென்றது. ஆனால் அது நேரே குரங்காரின் சலூனுக்குப் போகுமா? அதுதான் வாயாடியாயிற்றே. காடு மேடெல்லாம் பிடரியனின் போன முடி, மறுபடியும் வளர்ந்த விந்தையை விளக்கமாகப் பல இடங்களிலும் சொல்லி ஒரு வழியாக நடுப் பகலுக்குச் சலூன்காரக் குரங்குடன் வந்து சேர்ந்தது.

சிங்கத்தின் பிடரி முடிக் குவியலுக்குள் சிக்கிக் கிடக்கும் மிருகங்களைக் கண்ட குரங்குக்கு ஒரு நிமிஷம் ஒன்றுமே புரியவில்லை. பிறகு தன் துருப்பிடித்த கத்தரிக் கோலை எடுத்துக்



கொண்டது. எங்கே வெட்ட ஆரம்பிப்பது? பெரிய பிரச்னையாகிவிட்டது பார்பர் குரங்குக்கு. ஒரு வழியாகப் பிடரியனின் முடியில் புகுந்து விளையாடியது. இங்கும் அங்குமாக 'கிளிக் கிளிக்' என்றும், 'படக் படக்' என்றும் வெட்டித் தள்ளியது. யானையாரின் காதில் கொஞ்சம் காயம். பசுமானின் வால் முடி பறி போயிற்று. வேங்கையின் மீசை மயிரில் இரண்டு கோவிந்தா! ஒரு வழியாக எல்லா மிருகங்களும் அந்த முடிச் சிக்கலிலிருந்து விடுபட்டன. கடைசியில் நடுவே முடிக் குன்றாகத் தோன்றிய இடத்துக்குக் குரங்கு போனதும் ''குரங்காரே, ஜாக்கிரதை. அதற்குள்தான் சிங்கன் இருக்கிறான். பார்த்து வெட்டு'' என்றது யானை. வளர்ந்து வழிந்து கிடந்த முடிகளை வெட்டித் தள்ளி ஒரு வழியாக ஒழுங்கு செய்ததும் ''எப்படி, சரிதானா?'' என்று கேட்டது குரங்கு.



மரங்கொத்தி ஒரு மரக் கிளையில் போய் உட்கார்ந்து கொண்டு ''ஒரே வட்டமாக இருக்கப்பா. சிங்கனின் உச்சந்தலையில் அவ்வளவு முடி வேண்டாம். குறைத்துவிடு. அதே மாதிரி பக்கங்களிலும் கூடக் கொஞ்சம் குறைக்க வேண்டும்'' என்றது. மறுபடியும் குரங்கின் கத்தரிக்கோல் விரைவாக விளையாடியது.

''என்ன பார்பர் அப்பா நீ? உனக்கு முடி வெட்டவே தெரியல்லியே. 'ஒரே சதுரமாக்கி விட்டாயே!'' என்றது யானை இப்போது. பாபூன் மறுபடியும் பிடரியனின் முடியை வெட்டக் கிளம்பினான். அந்த நேரம் இவர்களின் இழுக்க இழுப்புக்கெல்லாம் இணங்கி வந்த பிடரியன் திடீரென்று....

''போதும், போதும் நிறுத்துங்கள். இப்படி ஆளுக்கு ஒரு யோசனை கூறினால் அடியேன் பிடரி மறுபடியும் அரோகராவாகிப் போகும். வளர்ந்த முடியை வெட்டிச் சிதைக்க வேண்டாம். சதுரமாகவே இருக்கட்டும். நான் மற்றச் சிங்கங்களிலிருந்து மாறுபட்டவன் என்பதைக் காட்ட என் பிடரி மயிர் இப்படிச் சதுரமாகவே இருக்கட்டும். இனி அதில் யாரும் கைவைக்க விடமாட்டேன்'' என்று கர்ஜித்தது பிடரியன். இன்றைக்கும் அந்தக் காட்டுக்கு நீங்கள் போனால் சதுர வடிவமாக வெட்டி விடப்பட்ட பிடரி மயிருடன் பிடரியன் கம்பீரமாக உட்கார்ந்திருப்பதைக் காணலாம். ஆனால் எந்தக் காடு என்று மட்டும் கேட்டுவிடாதீர்கள்!



தெரியுமா?

595. பர்மா நாட்டின் தலைநகரம் எது?

596. ஒட்டோமான் சாம்ராஜ்யம் எந்த நாட்டில் ஸ்தாபிக்கப்பட்டது?

597. நியான் வாயு எதிலிருந்து தயாரிக்கப்படுகிறது?

598. ஒரு காலன் நீரின் எடை எவ்வளவு?

599. உலகின் மிக உயரமான எவரெஸ்ட் இந்தியாவில் உள்ளது. இது சரியா? தவறு?

600. உலகில் புழக்கத்தில் உள்ள மிகப் பெரிய கோட்டையான வின்ஸ்டர் அரண்மனை பக்கிங்ஹாம் ஷயரில் உள்ளது. இது சரியா?

601. தண்ணீர் உஷ்ணத்தை அரிதில் கடத்தியா? எளிதில் கடத்தியா?

602. பெரு நாட்டில் முக்கிய ஏற்றுமதிப் பண்டம் என்ன?

603. சிம்ப்ளான் கணவாய் எந்த இரு நாடுகளை இணைக்கிறது?

604. வண்ணாத்துப் பூச்சிகளால் கடிக்க முடியாது. ஏனென்றால் அதற்குத் தாடைகள் இல்லை — இது உண்மையா? தவறு?

605. இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு வாழ்ந்தவர் கிரேக்கக் கவிஞர் ஆர்கிமிடீஸ். இது தவறு? சரியா?

606. புதன் வியாழக்கிழமைகளின் ஆங்கில வார்த்தைக்கு நார்ஸ் (Norse) கடவுளர்களின் பெயர் இடப்பட்டுள்ளது. அது என்ன என்று தெரியுமா?

607. கிரேக்கர்களின் முதற் கடவுளான ஸியஸ் (Zeus)ஐ ரோமானியர் எப்படி அழைத்தார்கள் தெரியுமா?

608. தான் மாறுதல் அடையாமல் ஆனால் பிற பொருள்களுடன் சேர்ந்து ரசாயனங்களை உற்பத்தி செய்யும் பொருளுக்கு என்ன பெயர்?

609. ஹேமோக்ளோபின் என்றால் என்ன?

610. நம் உடலில் எந்தப் பாகத்தில் டார்ஸல் (Tarsal) எலும்புகள் இருக்கின்றன?

611. ஆலிவர் க்ராம்வெல் சரித்திரப் புகழ் பெறுமுன் என்னவாக இருந்தார் தெரியுமா?

612. சமாதானக்காரர் (Peacemaker) என்று எந்த ஆங்கில மன்னர் அழைக்கப் பட்டார்?

613. சரித்திர காலத்துக்கு முற்பட்ட காலத்தில் வாழ்ந்த பிரும்மாண்டமான ஒரு மிருகத்தின் வழித்தோன்றலாக ஒரு மிருகம், தென் அமெரிக்காவில் சாதாரணமாகக் காணப்படுகிறது. அது எந்த மிருகம்?

614. கடலில் வாழும் ஸீல், மீன் இனத்தைச் சேர்ந்ததா? மம்மலா?

615. க்ளோராஃபில் என்றால் என்ன?

தெரியுமே!

விடைகள்: 595. ரங்கூன். 596. துருக்கி நாட்டில். 597. காற்றின் திரவ நிலையிலிருந்து. 598. பத்து பவுண்டுகள். 599. தவறு. எவரெஸ்ட் நேபாளத்தில் உள்ளது. 600. தவறு. வின்ட்ஸர் காஸில் பெர்க்ஷயரில் உள்ளது. 601. அரிதில் கடத்தி. 602. மீன். 603. இத்தாலியையும் ஸ்விட்ஸர்லாந்தையும். 604. உண்மை. 605. தவறு. ஆர்கிமிடீஸ் ஒரு விஞ்ஞானி. கவியல்ல. 606. ஓடின் (odin) வெட்னஸ்டே (புதன்) தார் (thor) தர்ஸ்டே (வியாழன்). 607. ஜுபிடர் என்று. 608. காடலிஸ்ட் (catalist) கிரியா ஊக்கி என்று பெயர். 609. இரத்தத்தைச் சிவப்பாக்கும் ஒரு பொருள். 610. கணுக்காலில். 611. விவசாயியாகவும், பிறகு பார்லிமெண்ட் அங்கத்தினராகவும் (MP) 612. ஏழாம் எட்வர்டு மன்னர். 613. ஆர்மடெல் லோ (ஒரு வகை எறும்பு தின்னி) 614. மம்மல் (குட்டி போட்டுப் பால் கொடுக்கக் கூடியது) இனத்தைச் சேர்ந்தது. 615. தாவரங்கள் தங்கள் உணவை எளிய ரசாயனங்களிலிருந்து தயாரித்துக் கொள்வதற்கு அவசியமான ஒரு பொருள். இதன் நிறம் பசுமை. பச்சயம் என்று பெயர்.

தொட்டால் தங்கமாகும்!

ஓர் ஊரில் ஏழைக் குடியானவன் ஒருவன் தன் மனைவி, குழந்தைகளுடன் வசித்து வந்தான். அவன் அன்றாடம் கூலி வேலை செய்து ஒரு நாளைக்கு, பத்து ரூபாய் சம்பாதித்து வந்து மனைவியிடம் கொடுப்பான். சந்தோஷமாக வாழ்ந்து வந்தார்கள். அவன் மனைவி ஜானகி அக்கம் பக்கம் இருப்பவர்கள் நல்ல துணிமணி, நகை நட்டு வாங்குவதைப் பார்த்துத் தானும் அது மாதிரி போட்டுக்கொள்ளவில்லை என்று பொறுமைப்பட ஆரம்பித்தாள். அதன் பிறகு தினமும் குடியானவனை அலட்சியம் செய்யவும், அவனுடன் சண்டை போடவும் தொடங்கினாள்.

அவன் எவ்வளவு சொல்லியும் அவள் கேட்கவில்லை. இந்தத் தினப்படிச் சண்டையால் குடியானவனுக்கு நிம்மதி இல்லாமல் போயிற்று.

ஒரு நாள் இரவு அவன் உறங்குவதற்கு முன்னால் மனம் உருக ''நாராயணா, நீதான் என் மனைவிக்கு நல்ல புத்தியைக் கொடுத்து, குடும்பம் அமைதியாக நடக்க அருள் புரிய வேண்டும்'' என்று வேண்டிக் கொண்டு படுத்தான்.

அன்று இரவு அவன் மனைவியின் கனவில் நாராயணன் தோன்றினார்.


விடியற்காலையில் கணவனை அவசரமாக எழுப்பி, ''நான் ஒரு கனவு கண்டேன். உங்கள் நாராயணன் 'உனக்கு என்ன வேண்டும்?' என்றார். 'நிறையப் பணம் வேண்டும்' என்றேன். உடனே 'நாளை மாலை நான்கு மணிக்கு உங்கள் கொல்லைத் தோட்டத்தில் மருதாணி மரத்திலிருந்து பாம்பு இறங்கிப் பக்கத்தில் இருக்கும் பொந்துக்குள் நுழையும். நீ அந்தப் பாம்பை அப்படியே தடவி விடு. அது தங்கக் கட்டியாக மாறி விடும். நீ பணக்காரியாகி விடலாம்' என்று சொன்னார்'' என்றாள்.

குடியானவனும், அவன் மனைவியும் மறு நாள் காலை வீடு மெழுகிக் கோலமிட்டு, சண்டையே இல்லாமல் அமைதியாக இருந்தார்கள். மணி நான்கு ஆயிற்று. மரத்திலிருந்து ஆறு அடி நீளத்துக்குப் பெரிய பாம்பு ஒன்று இறங்கி வந்தது. தன் கணவனைத் துணைக்கு அழைத்துக் கொண்டு குடியானவனின் மனைவி பாம்பைத் தொடப் போனாள். ஆனால் பயத்தால் உடம்பு நடுங்கியது. பாம்பின் அருகில் நெருங்கவே பயந்து கையைப் பின்னுக்கு இழுத்துக் கொண்டாள். பண ஆசை ஒரு பக்கம், உயிர் ஆசை மறு பக்கம்.

அந்தப் பாம்பு பக்கத்தில் இருந்த பொந்துக்குள் கொஞ்சம் கொஞ்சமாகச் செல்ல ஆரம்பித்தது. ஜானகி பாம்பின் தலை பொந்துக்குள் நுழைந்ததும் ஒரு மாதிரி தைரியத்தை வரவழைத்துக் கொண்டு கடைசியில் வால் பாகத்தைப் போய்ச் சடாரென்று தொட்டாள். அவள் தொட்ட அந்தத் துளிப் பாகம் அப்படியே தங்கமாகி விட்டது. உடன் அவள் சந்தோஷம் தாளாமல் கணவனிடம் அந்தத் தங்கத்தைக் கொடுத்து அதற்கு எவ்வளவு ரூபாய் கிடைக்கும் என்று விசாரித்து வரச் சொன்னாள்.


குடியானவன் தட்டான் கடைக்குப் போய்க் கேட்டதில் அவன் அதனுடைய மதிப்பு பத்து ரூபாய் என்று சொன்னான். அவன் சோர்வுடன் வீட்டுக்கு வந்து மனைவியிடம், ''நீ பேராசைப் பட்டாயே கிடைத்ததா? நாராயணன் அளந்தபடி, நமக்கு இந்தப் பத்து ரூபாய் தான். இதில் திருப்திப்படுவதுதான் பக்திசாலித்தனம்... இனிமேல் வீண் ஆசைப்படாதே; வீட்டில் சண்டை போடாதே!'' என்றான். அவனுக்கும் புத்தி வந்தது.

— ஆர். மணிசங்கர்





அது ஒரு சிறைச்சாலை. அவன் ஒரு கைதி. சிறைக் காவலாளியிடம் அவன், ''எனக்குச் சில பொருள்கள் தேவை. தர முடியுமா?'' என்று கேட்டான். கைதி உண்ண, உடுக்கத்தான் ஏதாவது கேட்பான் என்று எண்ணினான் காவல்காரன். ஆனால் கைதி தான் விரும்பிய பொருள்களைச் சொன்னபோது திகைத்துப் போய் நின்றான் காவல்காரன்.



இழுபடும் ரப்பரை இரும்பாக்கினவர்

கிருஷ்ணவேணி



ஒரு பெரிய துண்டு ரப்பர், சில ரசாயனப் பொருள்கள், ஒரு சலவைக்கல் பலகை, மரக் குழவி, கொஞ்சம் மக்னீஷியம். இவைதான் கைதிக்கு வேண்டியவை. காவல்காரன் கைதியின் விநோதமான வேண்டுகோளைச் சிறை அதிகாரியிடம் தெரிவித்தான்.

மாஸசூஸெட் மாகாணத்திலுள்ள பாஸ்டன் நகரச் சிறையதிகாரி அளித்த பதில் அந்தக் காவல்காரனை இன்னும் அதிக அதிர்ச்சிக்குள்ளாக்கியது. ''இவ்வளவுதானே? அவன் விருப்பத்தை நிறைவேற்று அப்பனே! அவன் நீ நினைப்பதுபோல் சாதாரணமான கைதி இல்லை. விஞ்ஞானத்தையே தன் வாழ்வின் மூச்சாகக் கருதும் இளைஞன் அவன். நல்ல கோடையிலே ரப்பர் பொருள்கள்—கோட்டு, காலணி போன்றவை—இளகிப் பயனற்றவைகளாகப் போவதைத் தடுப்பதற்கான முயற்சியில் ஈடுபட்டிருக்கிறான்'' என்றார் சிறை அதிகாரி. அந்தக் கைதியைப் பற்றி அவருக்குத் தெரியும்.

அந்தக் கைதியின் பெயர் **சார்லஸ் குட் இயர்**. சின்ன வயதிலிருந்தே ரப்பரிடம் ஒரு மோகம் அவனுக்கு. அது உஷ்ணத்தைத் தாங்க முடியாமல் இளகி உருகக் கூடியதாக இருக்கும் ஒரு குறையைத் தவிர்த்து விட்டால் அதை மனித குலத்துக்குப் பல வழிகளில் பயனுள்ளதாக்கலாம் என்று கனவு கண்டவன் குட் இயர்.

அமெரிக்காவில் உள்ள கனக்டிகட் மாகாணத்தின் நியூஹேவன் நகரில் 1800 ஆண்டு பிறந்தவர் சார்லஸ் குட் இயர். தகப்பனார் அமாசா குட் இயரும் ஆராய்ச்சியாளர்தான். எந்தப் பொருளானாலும் — பாட்டிலிலிருந்து பூட்ஸ் லேஸ் வரையில் அவைகளின் தரத்தை உயர்த்துவதற்கு முயன்று கொண்டே இருந்தவர். தோல்வியைக் கண்டு துவளாதவர். 'இந்தத் தடவை பயன் அளிக்கும்' என்று தொடர்ந்து முயன்றவர். அப்படிப்பட்டவருக்கு மகனாகப் பிறந்தவர் எப்படி இருப்பார்?

ஆனால் சார்லஸ் ஆரம்ப நாட்களில் அப்பாவின் முயற்சிகளில் அவ்வளவாக ஈடுபாடு காட்டவில்லை. எழுத்தராக வாழவே விரும்பினார். ஆனால் பதினாறாம் வயதில் அப்பாவின் இரும்புச் சாமான்கள் தயாரிக்கும் தொழிற்சாலையில் அவருக்கு உதவியாகப் பணி புரிய வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. அப்பாவின் பணிகளில் மெள்ள மெள்ள ஈடுபாடு வளர்ந்தது. அவரது புதுமைப் பொருள்களை விற்பதில் ஆர்வம் காட்டலானார்.

1826ம் ஆண்டில் சார்லஸ் நியூஹேவனில் தனியாக ஒரு கடை திறந்தார். தொழிலில் அவர் மனைவி கிளாரிஸ்ஸா உதவினாள். கணிசமான வருவாய் வரலாயிற்று. கஷ்டமில்லாத ஜீவனம். இந்தச் சமயத்தில்தான் சார்லஸிடம் ஒரு புதிய வேகம் பிறந்தது. புதுமைகளைக் காண வேண்டும் என்ற துடிப்புத்தான் அது. புதிய முறையில் இரும்பு தயாரிக்க முற்பட்டார். அதில் தம் சேமிப்பையெல்லாம் முடக்கினார்.. வெற்றி



கிடைக்கவில்லை. கைப்பொருளை இழந்தார். கஷ்டங்கள் தொடரலாயின. இதற்குள் இரண்டு குழந்தைகளுக்குத் தகப்பனாகி விட்டார் சார்லஸ். உடல் நிலையும் சரியில்லை. கடனாளியானார். வாங்கிய கடனைக் கொடுக்காதவர்களை அந்தக் காலத்தில் சிறைக்குத்தான் அனுப்புவார்கள். சார்லஸ் இப்படிப் பல முறை சிறைப் பறவையாக இருந்திருக்கிறார்.

கடன் தொல்லை. குடும்பத்தைக் காக்க வேண்டும் என்ற ஆர்வம். வேலை கிடையாது. புதிய முறையில் பித்தான்களைத் தயாரித்தார். நிலத்தை உழுவதற்குப் பயன்படும் பொருள்களில் அபிவிருத்திகளைச் செய்தார். இவ்விரண்டையும் சார்லஸின் தகப்பனாரின் தொழிற்சாலை உற்பத்தி செய்தது.

1834ம் ஆண்டு வாக்கில் குட் இயர் பல்வேறு சாதனங்களுக்கான வால்வுகளைத் தயாரிக்கலானார். முக்கியமாக, காற்று அழுத்தத்துக்கான வால்வுகளைச் செய்தார். ஒரு சமயம் ராக்ஸ்பரி இந்தியா ரப்பர் கம்பெனிக்குப் போக நேர்ந்தது. அவர்கள் உற்பத்தி செய்த வால்வுகளை ஆராய்ந்தார். அதில் சில அபிவிருத்திகளைச் செய்து தாமே ஒரு வால்வு தயாரித்துக் கொண்டு ஒரு தொழிற்சாலை அதிபரிடம் போனார். இவரது வால்வைப் பாராட்டினார்கள். ஆனால் ரப்பரினால் அந்த வால்வு தயாரிக்கப் பட்டிருந்ததை அவர்கள் விரும்பவில்லை.

''ரப்பரில் உன்னுடைய திறமையை வீணாக்காதே. வேறு எதிலாவது செலவிடு'' என்றார் முதலாளி. குட் இயருக்குக் கோபம் கோபமாக வந்தது.

தொழிற்சாலை முதலாளி ஆத்திரமடைந்த குட் இயரைத் தட்டிக் கொடுத்து வாசல்வரையில் அழைத்து வந்து, ''என் புத்திமதியைக் கேளு. உன்னுடைய வால்வுக்குப் பாராட்டுக்கள். குளிர்ச்சியினாலோ, உஷ்ணத்தினாலோ பாதிக்கப்படாத ரப்பரை உருவாக்கி, அதில் வால்வுகளைத் தயாரித்துக் கொடுத்தால் உன்னுடைய வால்வுகளை ஏராளமாக வாங்கிக் கொள்ளுகிறோம்'' என்று கைகுலுக்கி அனுப்பி வைத்தார்.

உற்சாகத்தை உலர வைக்கும் இந்த வரவேற்பு சார்லஸிடம் ஒரு வீம்பை உண்டாக்கியது. அந்த வீம்பு அவரை ரப்பரில் மாற்றம் காண முழு மூச்சுடன் ஆராய வைத்தது. அதனால் அவருடைய குழந்தைகள் நன்கு விளையாத உருளைக் கிழங்குகளைப் பூமியிலிருந்து தோண்டி எடுத்து உண்ணும் அவல நிலைக்கு ஆளானார்கள்.

'அது சரி. ரப்பரில் அப்படி என்ன ஆராய்ச்சி?' என்ற சந்தேகம் தோன்றுகிறதில்லையா உங்க-



ளுக்கு? இன்று நாம் காணும் ரப்பர் உறுதியானது. உஷ்ணத்தையும் குளிர்ச்சியையும் தாங்கி நிற்கக் கூடியது. ஆனால் ஆதியில் ரப்பர் பாலிலிருந்து உருவான பொருள் இப்படி இல்லை. அந்தக் காலத்து ரப்பரினால் தயாரித்த பொருள்கள் கோடையில் கொழகொழவென்று இளகி உருகின. குளிரில் வெடித்தன. ரப்பரின் இந்த இளகும் தன்மையை மாற்றி அதற்கு உறுதியும் உழைக்கும் திறனும் கொடுத்தவர் சார்லஸ் குட் இயர். இந்தக்

துறையில் பலர் முயன்றாலும் வெற்றி கண்டவர் குட் இயர்தான். சார்லஸ் குட் இயர் இல்லையானால் இன்று உலகில் ரப்பருக்கு இத்தனை ஏற்றம் கிடைத்திருக்காது. ரப்பர்ப் பொருள்களை விற்பவர்களுக்குக் கோடை காலத்தில் சூரிய உஷ்ணத்தினால் பல லட்சம் டாலர் மதிப்புடைய ரப்பர் பொருள்கள் வீணாயின. அந்த நிலையை மாற்றியமைக்க வேண்டுமென்று உறுதி பூண்டார். இதற்காகத் தம் குழந்தைகளின் பாடப் புத்தகங்களைக் கூட விற்றுச் சோதனையைத் தொடர்ந்தார். உடல் ஆரோக்கியம் கெட்டது. குழந்தைகள் இறந்தன. கடனுக்காக அவர் அடிக்கடி சிறைவாசத்தையும் அனுபவித்தார். சிறைச் சாலையிலும் தமது ரப்பர் ஆராய்ச்சியை விடாமல் தொடர்ந்தார்.

பல நூறு பவுண்டு ரப்பர்களை வெட்டிச் சிதைத்துக் காய்ச்சிக் கருக்கினார். ரப்பர் பிசினோடு உப்பு, சர்க்கரை, மணல், சூப்பு, சீஸ், இப்படி எதை எதையோ கலந்து காய்ச்சி அதன் குணம் மாறுகிறதா என்று ஆராய்ந்தார். ரப்பரோடு நிறையத் துணியைச் சேர்த்துக் காய்ச்சி அந்தக் கலவையில் சில நூறு ஜோடி காலணிகளைத் தயாரித்தார். ஆனால் புத்திசாலித்தனமாக அவைகளை வெளியே விற்பனைக்கு அனுப்பாமல் சில காலம் உள்ளேயே வைத்திருந்து அதில் ஏதாவது மாற்றம் ஏற்படுகிறதா என்று பார்க்கக் காத்திருந்தார். கோடை வந்தது. அத்தனை காலணிகளும் உருகி, உருத் தெரியாமல் ஒரே மொத்தையாகி விட்டன.

ஒரு தடவை விளக்குக் கரிக்குப் பதிலாக ரப்பருடன் மக்னீஷியா என்ற வெள்ளைப் பொடியைக் கலந்து காய்ச்சினார். கறுப்பு ரப்பருக்குப் பதில் வெள்ளை ரப்பர் கிடைத்தது. மற்றவைகளைவிட இந்த மக்னீஷியக் கலவை ரப்பரில் ஒருவித உறுதியை உண்டாக்கிற்று. ரப்பர் தடவிய துணிகளைத்தான் அதுவரை தயாரித்திருந்தார்கள். குட்இயர் முழு ரப்பரினால் ஆன துணிகளையே (ஷீட்டுகள்) உருவாக்கினார். மக்னீஷியாவின் சேர்க்கை பூரண வெற்றி என்று சொல்ல முடியாவிட்டாலும் ஓரளவு ரப்பரின் இளகும் தன்மையை மாற்றியது. தொடர்ந்து அவர் சோதனைகள் செய்தார். இதனால் நம்பிக்கையடைந்த குட் இயர் தம் வீட்டையும் உடைமைகளையும் விற்றுப் பணமாக்கிக் கொண்டு நியூயார்க்குக்குக் குடிபெயர்ந்தார்.

தாம் தங்கியிருந்த போர்டிங் ஹவுஸிலிருந்து ஆறு மைல்களுக்கு அப்பால் இருந்த ஒரு பழைய வேலை செய்யாத மில்லைக் குத்தகைக்கு எடுத்துக் கொண்டு தம் ஆராய்ச்சியைத் தொடங்கினார். ஒவ்வொரு நாளும் ஜாடிகளில் ரசாயனங்களைச் சுமந்தபடி ஆறு மைல்கள் நடந்து அந்த மில்லுக்குப் போவார். ஓரளவு கெட்டிப்பட்ட ரப்பரைக் கொண்டு பல பொருள்களை உற்பத்தி செய்யலானார். வேலைக்குச் சில ஆட்களை அமர்த்திக் கொண்டார். ரப்பரினால் திரைச்சீலைகளைக்கூட உருவாக்கிக் கண்காட்சிச் சாலைகளில் காட்சிப் பொருளாக்கிப் பரிசுகளும் பெற்றார்.

நிலைமை கொஞ்சம் திருந்தியது. அரைப் பட்டினி இல்லாமல் முழு வயிற்றுக்கு உண்ணும் நிலைக்கு குட்இயர் தயாரித்திருந்த ரப்பர்ப் பொருள்கள் விலை போயின. நியூயார்க் நகர வீதிகளில் உச்சந் தலையிலிருந்து உள்ளங்கால் வரை ரப்பரினால் ஆன உடைகளை அணிந்த மனிதர்களை ஊர்வலமாக விட்டுத் தம் ரப்பர்ப் பொருள்களுக்கு விளம்பரம் செய்தார் குட்இயர். ஸ்டேடன் தீவில் புதிய பெரிய தொழிற்சாலையை ஏற்படுத்தினார் 'சார்லஸ் குட் இயர் ரப்பரில் செய்யாத பொருள் கரன்ஸி நோட்டுக்கள்தான். அனுமதி கொடுத்தால் மன்னன் அதையும் செய்து விடுவான்' என்று அவர் தொழிற்சாலையில் உள்ள தொழிலாளர்களே வேடிக்கையாகக் கூறுமளவுக்கு குட்இயர் ரப்பர் வெறியராக அதில் ஆராய்ச்சி செய்து வந்தார்.

ஒரு சமயம் ஆப்பிள் காடி அவர் தயாரித்த ரப்பர்த் திரைச்சீலையில் படவே அது உருகிவிட்டது. காடி ரப்பரை உருக்குமானால் பிறகு அதனால் என்ன பயன்? இத்தகைய தோல்விகள் குட் இயரின் உள்ளத்தில் உறுதியையே விதைத்தன. எப்படியும் ரப்பரை மனிதனுக்கு உபயோகமுள்ள பொருளாக்கிவிடுவது என்று முழுமூச்சுடன் முனைந்தார்.

எதிர்பாராதவிதமாக ஒரு செயல் நிகழ்ந்தது. அதுவே ரப்பருக்கு இன்னும் உறுதியைக் கொடுக்க முடியும் என்ற உண்மையை உணர்த்தியது. ஒரு சமயம் ரப்பர்த் திரைச் சீலையில் வண்ணச் சித்திரங்களை வரைந்து கொண்டிருந்தார் அழகுக்காக. அப்போது அதில் ஒரு தவறு ஏற்பட்டது. பெயின்டைத் துடைக்க வீர்யமுள்ள நைட்ரிக் அமிலத்தைப் பயன்படுத்தினார். கொஞ்சம் அதிகமாகவே திரைச் சீலையில் அமிலம் விழுந்துவிட்டது. அதனால் ரப்பரின் நிறம் மாறியது. ஆகவே அது வீணாகிவிட்டதென்று திரைச்சீலையை மூலையில் வீசினார். சில நாட்கள் கழித்து அன்று வீணான ரப்பர்

துணியின் நினைவு வரவே அதை எடுத்துப் பார்த்தார். அவருக்கு அதிசயம் காத்திருந்தது. மற்றப் பகுதிகளைப் போல் அன்றி அந்த அமிலம் பட்ட இடம் கெட்டியாக இருந்தது. கையில் ஒட்டிக் கொள்ளவில்லை. மிருதுவாகவும் இல்லை. குட்இயரின் உற்சாகம் கரை புரண்டது. உடனே ரப்பருடன் மக்னீஷியா, நைட்ரிக் அமிலம், தாமிரம் ஆகியவைகளைக் கலந்து புதிய கெட்டியான ரப்பரை உருவாக்கினார். இதற்கு 'ஆஸிட் காஸ் பிராஸஸ்' என்று பெயரிட்டு அதன் உரிமையைப் பேடண்டு செய்து கொண்டார். ஆனால் இத்தனை பாடுபட்டு ரப்பரின் குணத்தை ஓரளவு மாற்றி அமைத்து அதை மக்கள் வரவேற்கும் நிலையில் நாடு 1836லிருந்து 1839 வரை பொருளாதார நெருக்கடியில் அவதிப்படவே குட் இயரின் தொழில் பாதிக்கப்பட்டது.

நைட்ரிக் அமிலப் பூச்சு, ரப்பர்ப் பொருளின் மேல்பரப்பைத்தான் கெட்டியாக்கியது. அதன் உள் பக்கம் முன் போலவே கெட்டிப்படாத நிலையிலேதான் இருந்தது. இன்னும் உறுதியான ரப்பர் உருவாகவில்லை. குட் இயரின் வேலையும் முடியவில்லை.

ரப்பர் பிசினோடு கந்தகத்தைக் கலந்து அதை வெயிலில் காய வைத்தால் ரப்பர் கெட்டிப்படும் என்று ஓர் ஆராய்ச்சியாளர் கூறினார். அதன்படி செய்த குட் இயருக்கு அதுவும் எதிர் பார்த்த பலனைத் தராத நிலையில் ஒரு நாள் தற்செயலாக ஒரு விபத்து நிகழ்ந்தது. அதிலிருந்து பிறந்தது, கெட்டியாக்கப்பட்ட இன்றைய ரப்பர். இதை 'வல்கனைஸ்' என்று கூறுவார்கள். வல்கனைசேஷன் என்ற சொல் எப்படி வந்தது? ரோமானியர்களின் நெருப்புக் கடவுளுக்கு வல்கான் என்று பெயர். அழிக்கும் தன்மையைக் கொண்டது நெருப்பு. ஆனால் சார்லஸ் குட்இயரோ மனிதனுக்கு நன்மை பயக்கும் ஆக்க வேலைக்கு நெருப்பைப் பயன்படுத்தினார்.

மிருதுவானதும் இளகக்கூடியதுமான ரப்பரை குட்இயர் எப்படி வல்கனைஸ் செய்தார்? ஆராய்ச்சியின் போது ஒரு நாள் ஒரு ரப்பர்த் துண்டு ஸ்டவ் அடுப்பின் மீது விழுந்துவிட்டது. சாதாரண வெயிலுக்கு இளகும் ரப்பர் அடுப்பில் விழுந்தால் உருகத்தானே வேண்டும்? ஆனால் அந்த ரப்பர் உருகவில்லை. அதற்குப் பதில் எரிந்து, தோலைப் போல் ஒரு கெட்டியான பொருளாகியது. அது கந்தகம் கலந்த ரப்பர். பளீரென்று ஒரு பிரகாசம். ரப்பரை உருகாமல் கரியாக்கியது அதிலுள்ள கந்தகம்தான் என்ற உண்மையை அறிந்தார். இந்தக் கலவையைக் குறிப்பிட்ட அளவு மட்டுமே காய்ச்சினால் அது கரியாகாமல் கெட்டியான ஒரு பொருள் ஆகுமா? முயன்று பார்க்க வேண்டும். ஆனால் அதற்கான தொழிற்சாலை நஷ்டம் காரணமாக மூடிக் கிடந்தது.

ஆனால் ஆராய்ச்சி வெறி கொண்ட குட்இயருக்கு இடமா இல்லை? மனைவியின் சமையல் அறைக்குப் போனார். கொதிக்கும் கந்தகக் குழம்பில் ரப்பர்த் துண்டைப் போட்டால் அது என்ன மாற்றத்தை அடைகிறது என்று பார்க்கத் திட்டமிட்டார். அடுப்பின் மீது ஒரு வாணலியை வைத்துக் கந்தகத்தை திருக்கி அதில் ரப்பர்த் துண்டைப் போட்டுவிட்டுக் காத்திருந்தார் ஆவலோடு. அதனால் ஏற்பட்ட குமட்டி எடுக்கும் நாற்றம் சகிக்காமல் குட் இயரின் மனைவி வெளியே ஓடினாள். கந்தகத்தினுள் ரப்பர் உருகவில்லை. கரிக்கட்டியாகியது. ரப்பரை வல்கனைஸ் செய்யக் கூடிய வழியைக் கடைசியில் கண்டே பிடித்துவிட்டார் சார்லஸ் குட்இயர். சரியான கொதி நிலையில் ரப்பர் கரிக் கட்டியாகாமல் ஆனால் கெட்டிப்பட்ட ஒரு பொருளாக அதை மாற்ற முடியும் என்ற நம்பிக்கை பிறந்தது. அதன்படியே முயன்று வெற்றியும் கண்டார். வல்கனைஸ் செய்யப்பட்ட ரப்பர் உறுதியானது. உஷ்ணத்தினால் பாதிக்கப்படாதது. வளைத்தால் ஒடியாதது. பட்ட பாட்டுக்குப் பலன் கிடைத்தது. கொத கொத ரப்பரை விதம் விதமான காரியங்களுக்குப் பயமின்றி உபயோகிக்கும் வகையில் உறுதிபடைத்ததாக்கிவிட்டார் சார்லஸ் குட்இயர். ரப்பரின் பெருமையை உயர்த்திய குட்இயருக்கு அமெரிக்காவும் ஐரோப்பாவும் பாராட்டு விருதுகள் வழங்கின.

இன்று நெடுஞ்சாலைகளில் எவ்வளவு லாரிகள், கார்கள், பஸ்கள் எத்தனை வேகமாக ஓடுகின்றன? விமான தளத்திலே 'போயிங்கும்' 'சூபர்சானிக்கும்' எப்படி ஓடி மேலே உயருகின்றன? இவைகளின் ஓட்டத்துக்கெல்லாம் காரணம் பெரிய பெரிய ரப்பர் டயர்கள் இல்லையா? மிருதுவான ரப்பரை உறுதி மிக்கபொருளாக்கியதினால்தானே இன்று அதில் டயர்களை உருவாக்க முடிகிறது. இதேபோல மின்சாரச் சாதனங்கள், பண்ணைப் பொருள்கள், சமையலறைப் பாண்டங்கள் என்று உறுதியாக்கப்பட்ட (வல்கனைஸ் செய்யப்பட்ட) ரப்பர் எங்கெல்லாம் பரவி இருக்கின்றன என்பதைக் கற்பனை செய்து பாருங்கள். அப்போது புரியும் இன்றைய உலகம் குட் இயருக்கு எத்தனை நன்றிக்கடன் பட்டிருக்கிறதென்று.

ஊரைக் காத்த தர்மம்



இராதாபுரத்தில் மாணிக்கம் என்றொரு வைத்தியர் இருந்தார். அவருக்குத் தெரியாத பச்சிலையோ, மூலிகையோ இல்லையென்று கூறலாம். எப்படிப்பட்ட நோயையும் குணப்படுத்தும் மருந்துகள் அவரிடம் இருந்தன.

மாணிக்கம் நினைத்திருந்தால் வைத்தியத்தின் மூலம் கோடி கோடியாகச் சம்பாதித்திருக்கலாம். காரணம், அந்த வட்டாரத்தில் உள்ள செல்வர்கள் எல்லாம் அவரிடம்தான் வந்து வைத்தியம் செய்து கொள்வார்கள்.

வைத்தியர் மாணிக்கம் வீட்டுக்கு முன்னால் ஒரு சிறு உண்டியல் வைத்திருந்தார். நோய் குணமானவர்கள் அதில் தங்களால் இயன்றதைப் போட்டு விட்டுச் செல்வார்கள். யார் எவ்வளவு பணம் போட்டார்கள் என்று அவர் கவலைப்பட்டதே இல்லை.

உண்டியல் பணத்தையும் அவர் தமக்காகச் செலவிடுவதில்லை. எல்லாம் அனுமார் கோவிலுக்கும் தர்மத்துக்கும் தான். வீட்டுக்குப் பின்னால் ஒரு பூந்தோட்டம் போட்டிருந்தார். அதில் பல வகையான மருந்துச் செடிகளையும் வளர்த்திருந்தார். எப்பொழுதும் தோட்டத்தில் தான் வேலை செய்து கொண்டிருப்பார். ஒரு பூக்காரன் அவர் தோட்டத்தில் பூக்கின்ற பூக்களை மொத்தமாக வாங்கிக் கொண்டு போவான். அவன் கொடுக்கிற பணம் அவருக்குச் சாப்பாட்டுக்கும் துணிகளுக்கும் போதும்.

அவர் வீட்டுக்குச் சிறிது தள்ளிக் கண்ணாயிரம் என்பவர் இருந்தார். அவர் ஒரு வியாபாரி. எப்படியெல்லாமோ நிறையப் பணம் சேர்த்து வைத்திருந்தார்.

வியாபாரி கண்ணாயிரம் வைத்தியரைப் பார்க்கும்போதெல்லாம், ''என்ன வைத்தியரய்யா ! பிழைக்கத் தெரியாத ஆளாயிருக்கீங்க. நீங்க கொடுக்கிற மருந்து ஒவ்வொன்றுக்கும் இவ்வளவுன்னு கணக்கு வைச்சுப் பணம் வாங்கினா ஆயிரம் ஆயிரமாக் கிடைக்கும்'' என்று கூறுவார்.

அதற்கு மாணிக்கம், ''தேவைக்கு மேலே பொருள் எதுக்கு? இயற்கைத் தாய் மருந்தைக் கொடுக்கிறாள். அதை நான் நோயாளிகளுக்குக் கொடுக்கிறேன். கடவுள் அருளால் நோய் குணமாகுது. இதுக்கு நான் பணம் வாங்கினால் பாவம் இல்லையா? நீங்களும் பணம் சேர்க்கிறது மட்டும் குறியா இல்லாமல் தர்மமும் செய்யுங்க'' என்று அறிவுரை கூறுவார்.

ஒரு நாள் இராதாபுரம் ஊரே அல்லோல கல்லோலப்பட்டது. ஒரு கொள்ளைக் கூட்டத்தினர் ஊரை வளைத்துக் கொண்டு ஊரில் இருக்கின்ற பொருட்களையெல்லாம் கொள்ளையடித்தனர். ஊரில் உள்ள ஆட்களையெல்லாம் ஓரே இடத்தில் கூடி இருக்கச் செய்தனர். அதில் வைத்தியரும் வியாபாரியும்கூட இருந்தனர்.

கொள்ளைக்காரர்களில் ஒருவனுக்கு வருகின்ற வழியில் பாம்பு கடித்து விட்டது. அவனையும் அவர்கள் உடன் அழைத்து வந்திருந்தனர். அவனுக்கு விஷம் தலைக்கு ஏறி, மயங்கிக் கீழே விழுந்து விட்டான்.

அவனைப் பார்த்த வைத்தியர் மாணிக்கம், ''அந்த ஆளை நாகம் தீண்டியிருக்கின்றது. அனுமதி தாருங்கள். ஒரு பச்சிலை கொண்டு வந்து அந்த ஆளைக் காப்பாற்றுகிறேன்'' என்றார்.

பக்கத்திலிருந்த வியாபாரி கண்ணாயிரமோ, ''என்ன வைத்தியரய்யா, உங்களுக்கென்ன பைத்தியமா ? அவனுங்க நம்ம சொத்தையெல்லாம் கொள்ளையடிக்கிறானுங்க. அவன்களிலே ஒருத்தன் செத்தால் நமக்கென்ன ?'' என்று கோபமாகக் கேட்டார்.

ஆனால் மாணிக்கமோ, ''செல்வத்தைவிட உயிர் உயர்ந்தது. அவர்கள் செய்கிற பாவத்தை அவர்களே கட்டிக்

கொள்ளட்டும். அதற்காகக் கண்ணுக்கு முன்னால் ஓர் உயிர் போவதை என்னால் பார்த்துக் கொண்டு சும்மா இருக்க முடியாது'' என்று கூறிவிட்டார்.

கொள்ளைக் கூட்டத் தலைவனின் அனுமதி பெற்றுச் சென்று, தோட்டத்திலிருந்து ஒரு பச்சிலையை மாணிக்கம் பறித்துக் கொண்டு வந்தார். அதனைக் கசக்கிப் பாம்பு கடித்த ஆளின் கண்ணிலும், மூக்கிலும், வாயிலும் பிழிந்தார். வாயில் நுரையுடன் மயங்கி விழுந்திருந்த அந்த ஆள் சிறிது நேரத்தில் தூக்கத்திலிருந்து விழித்தவன் போல் எழுந்து உட்கார்ந்தான்.

பாம்பு கடித்த ஆள் இறந்துவிடுவான் என்று நினைத்துக் கொண்டிருந்த கொள்ளைக் கூட்டத் தலைவனுக்கு அந்த ஆள் பிழைத்துக் கொண்டது ஆச்சரியமாகவும், மிகுந்த மகிழ்ச்சியாகவும் இருந்தது.

கொள்ளைக் கூட்டத் தலைவன் வைத்தியரைப் பார்த்து, ''உங்கள் வைத்தியத்தால் எங்கள் ஆளைக் காப்பாற்றி விட்டீர்கள். உங்களுக்கு என்ன வேண்டுமானாலும் கேளுங்கள், தருகிறேன்!'' என்றான்.

மாணிக்கம், ''நான் பொதுவாக வைத்தியத்துக்கு ஒன்றும் வாங்குவதில்லை. ஆனால், இன்று உங்களிடம் ஒன்று கேட்கிறேன். என் வைத்தியத்துக்கு நீங்கள் பிரதி உபகாரம் செய்ய விரும்பினால் எங்கள் ஊரைக் கொள்ளை அடிக்காமல் விட்டுச் செல்லுங்கள்'' என்றார்.

சிறிது நேரம் யோசித்த கொள்ளையர் தலைவன், தம் ஊரின் மீது வைத்தியர் கொண்ட பற்றைப் போற்றி, ''அப்படியே செய்கின்றோம்'' என்று கூறினான். அவ்வூரில் கொள்ளையடித்த பொருட்களை அங்கேயே போட்டுவிட்டுக் கொள்ளைக் கூட்டத்தினர் திரும்பிச் சென்றனர்.

வியாபாரி கண்ணாயிரம், வைத்தியரால் ஊர் மக்களின் செல்வமும் உயிர்களும் காப்பாற்றப் பட்டதை உணர்ந்தார். ''தர்மம் உங்களை மட்டுமல்ல, எங்களையும் காத்து விட்டது'' என்று கூறினார். தாமும் அன்று முதல் தர்மம் செய்யத் தொடங்கினார்.





'கோகுல'த்தில் வெளியாகும் கதைகளில் காணப்படும் பெயர்கள், சம்பவங்கள் யாவும் கற்பனையே ● சென்னை, சேத்துப்பட்டு 'கல்கி' அச்சகத்தில், பரதன் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட் நிறுவனத்துக்காக ஆர். அனந்தநாராயணனால் அச்சிட்டு வெளியிடப்பட்டது. ● ஆசிரியர்: சதாசிவம்


ருசியானவை... அருமையானவை... பிரமாதமானவை
30
பைசாதான்!
PARLE
POPPINS
MIXED FRUITY SWEETS
30 Paise
புதிய பார்லே பாப்பின்ஸ்
பழரச மிட்டாய்கள்
எலுமிச்சை, ஆரஞ்சு, சாத்துக்குடி, அன்னாசி மற்றும்
ராஸ்ப்பெர்ரி ஆகிய ஐந்து பழரசச் சுவைகளில்
ருசிமிக்க 13 மிட்டாய்கள்—குறைந்த விலைகொண்ட
கையடக்கமான பேக் ஒவ்வொன்றிலும்!
பாப்பின்ஸ் சுவையுங்கள்— பழரசச் சுவையை அனுபவியுங்கள்